

பிரபல அமைச்சர் ஒருவர் 60 கோடி ரூபா பெறுமதியான வீடொன்றை 10 கோடி ரூபாவுக்கு கொள்வனவு செய்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் குறித்து அரச மேலிடம் இரகசிய விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக தகவல்.

இந்த அமைச்சர் இவ்வளவு பணத்தை எங்கிருந்து பெற்றார், குறைந்த விலையில் வீட்டை எவ்வாறு கொள்வனவு செய்தார்? என்பன பற்றியும் தேடப்படவுள்ளதாம்.

**உஷ்**


Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 223 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 22ஆம் திகதி திங்கட்கிழமை (05.05.2025) ஹிஜ்ரி 1446, துல்கஃதா - 06, 0115 886187- விலை ரூ.50 பக்கங்கள் 12




**கமெண்ட் கந்தர்**

ஸ்ட்ரைக் செய்ததால் வந்த நட்டத்தை தொழிற்சங்கத் தலைவர்களிட்ட அறவிடவேணும் பாருங்கோ...

# 10 வருட வேலைநிறுத்தத்தால் ரூ.300 கோடி இழப்பு!



» 02பக்கம்

## பேராதனை பல்கலை பேராசிரியர் வசந்த வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்





## தமிழக மீனவர்களின் படகுகளை அழிக்க இலங்கை திட்டம்

### ராமதாஸ் தெரிவிப்பு

தமிழக மீனவர்களின் படகுகளை உடைத்து ஆழ்கடலில் மூழ்கடிக்கச்செய்ய இலங்கை அரசு திட்டமிட்டுள்ளதான செய்திகள் பெரும் அதிர்ச்சியளிக்கின்ற நிலையில், மத்திய அரசு தலையிட்டு படகுகளை மீட்கவேண்டுமென்று பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அறிக்கையில்,.. 02 பக்கம்

## தேர்தல் தினத்தில் விசேட விடுமுறை

### வேதனக் குறைப்பின்றி வழங்க அறிவுறுத்தல்

தேர்தல் இடம்பெறும் நாளைய தினத்துக்கான விடுமுறை தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

அதன்படி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு நாளை 06ஆம் திகதி அரச மற்றும் தனியார் துறையினருக்கு வேதனக் குறைப்பின்றி விடுமுறை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இது தொடர்பான அறிவிப்பில் மேலும், பல்கலைக்கழகங்களின் பணிக்குழாமினருக்கும்... 02 பக்கம்

### - கிளப் வசந்த கொலை -

## கைதான 'லொக்குபெட்டி' அழைத்துவரப்பட்டார்

### பெலாரஸிலிருந்து கொழும்புக்கு கொண்டு வந்தது சிஐடி



» 02பக்கம்


## பதில் அமைச்சர்கள் நியமனம்

வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் (Luong Cuong)இன் அழைப்பின்பேரில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள காரணத்தால் 04 அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கீழ் உள்ள டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கும் அமைச்சர் விஜித ஹேரத்தின் கீழ் உள்ள வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுக்கும் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரான... 02 பக்கம்

## தீவிரவாதிகள் கொழும்பு வந்ததாக மின்னஞ்சல்




### கட்டுநாயக்க விமான நிலையம் சோதனையிடப்பட்டதன் பின்னணி

சென்னையிலிருந்து இலங்கைக்குச் சென்ற விமானத்தில் பஹல்காம் தாக்குதல் தொடர்பாக தேடப்படும் பயங்கரவாதிகள் இருப்பதாக இந்தியா தகவல் வழங்கியதையடுத்து கொழும்பில் அந்த விமானம் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டது. 02 பக்கம்

## பெண் கரும்புலியை நேரில் கண்ட அதிர்ச்சி இரு வாரங்கள் தூக்கமின்றி தவித்த மைத்ரி!

### நீதிமன்றத்தில் வெளியான தகவல்



முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன விவசாய அமைச்சராக இருந்தபோது 2008ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட... 02 பக்கம்

## அவுஸ்திரேலிய பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய இலங்கைப் பெண்கள்!

அவுஸ்திரேலிய பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ், சிங்கள பெண்கள் இருவர் பாராளுமன்ற உறுப்பினர்களாக வெற்றியீட்டியுள்ளனர்.

அஷ்வினி அம்பிகைபாகர் அவுஸ்திரேலியா சிட்னி Barton தொகுதியில் தொழிற்கட்சி சார்பில் போட்டியிட்டு, 66 சதவீதத்துக்குமேல் வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

இவர் கவிஞர் அம்பி அம்பிகைபாகரின் பேத்தியாவார்.

இலங்கையைச் சேர்ந்த கசாண்ட்ரா பெர்னாண்டோ, இரண்டாவது தடவையாக வெற்றி பெற்று, அவுஸ்திரேலிய பாராளுமன்றம் செல்கிறார்.

இலங்கையில் பிறந்து தனது 12ஆவது வயதில் அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்த கசாண்ட்ரா, தொழிலாளர் கட்சியின் சார்பில் ஹோல்ட்டின் விக்டோரியன் பிரிவில் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ளார்.






# வடக்கில் காணிகளை அபகரிக்கும் வர்த்தமானி வடக்கு - தெற்கு உறவை மேலும் பாதிக்கச் செய்யும்

## ஜனாதிபதிக்கு சுமந்திரன் கடிதம்

வர்த்தமானி அறிவித்தல் மூலம் வடக்கு மக்களின் காணிகளைப் பிடுங்கும் நடவடிக்கை ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கின்ற வடக்கு - தெற்கு உறவை மேலும் பாதிக்கச் செய்யும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு எம்.ஏ.சுமந்திரன் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பான வர்த்தமானியை மீளக் கை வாங்குமாறு கோரி காணிகள் நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் 28.03.2025 திகதியிட்டு வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி பிரசுரம் என்ற தலைப்பில் அமைந்த இந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு,

மேற்சொன்ன வர்த்தமானி இல: 2,420 சம்பந்தமாக தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன். இந்த அறிவித்தலின் பிரகாரம் தங்களது உரித்து சார்ந்த கோரிக்கைகளை உரிமையாளர்களும் மற்றவர்களும் வர்த்தமானியின் திகதியிலிருந்து 03 மாத காலங்களுக்குள் முற்படுத்த வேண்டும்.

தெளிவான உரித்தாவணங்கள் இல்லாவிடில் அந்தக் காணிகள் அக்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 5(1) இன் கீழ் அரச காணி என்று பிரகடனப்படுத்தப்படும். இந்தக் கட்டளைச் சட்டம் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களால் எமது மக்கள் நூற்றாண்டுகளாக பாவித்து வந்த, ஆனால் தெளிவான உரித்தாவணங்கள் இல்லாத காணிகளை பறிப்பதற்காக உருவாக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இச் சட்டம் எப்போதோ அகற்றப்பட்டிருக்க வேண்டும். எது, எப்படியாக இருப்பினும் வடக்கு, கிழக்கு மக்கள் கடந்த 50 ஆண்டு



காலத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து இன்னமும் முழுமையாக தங்கள் நிலங்களில் மீள் குடியேற்றப்படாத நிலையில் இருக்கின்றார்கள்.

கீழே கூறப்படும் காரணங்களுக்காகவும் வேறும் காரணங்களுக்காகவும் இந்தச் சட்டம் தற்போதைய சூழ்நிலையில் உபயோகப்படுத்தப்படக் கூடாது.

1. பல தொடர்ச்சியான இடம்பெயர்வுகள் சாதாரண வாழ்வை குழப்பியுள்ளதோடு, இன்னமும் அது திருத்தியமைக்கப்படவில்லை.

2. கட்டாய இடப்பெயர்வுகளாலும் இந்தப் பிரதேசங்களை அழித்தொழித்த சுனாமி பேரலையினாலும் மக்கள் தமது உறுதிகளையும் மற்றைய ஆவணங்களையும் இழந்துள்ளனர்.

3. இந்தக் காணிகளின் உரித்தாளர்கள் பலருக்கு பல வருடங்களுக்கு முன்னரே மரித்த முன் உரித்தாளர்களிடம் இருந்து முறையாக உரிமை மாற்றம் செய்யப்படவில்லை.

4. பல இலட்சக்கணக்கான மக்கள் போர்ச் சூழலில் இருந்து தப்பி வெளிநாடுகளில் அகதிகளாக முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

**வடக்கு, கிழக்கு மக்களின் உரிமை**

இந்தியாவின் தமிழ் நாட்டில் ஐ. நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரின் அனுமதியோடு ஒரு இலட்சமளவிலானவர்கள் வாழ்கின்றார்கள்.

இந்தச் சூழ்நிலையில் இந்த வர்த்தமானியில் கேட்கப்பட்டவாறு தமது கோரிக்கைகளை முன்வைப்பதென்பது இந்த மக்களால் செய்ய முடியாத ஒன்றாகும்.

இந்த நடவடிக்கை தொடருமாக இருந்தால் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் தமிழ் மக்கள், அந்த மாகாணத்தின் மக்கள் என்ற ரீதியில் சட்டத்தின் உரித்தோடு தமது நிலங்களை மீளவும் பெற்றுக்கொண்டு அவற்றைத் தாமாக ஆட்சி செய்யும் உரிமையை இழந்து விடுவார்கள்.


இது வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகளை மதிக்காத செயலாகவும் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கின்ற வடக்கு - தெற்கு உறவை மேலும் பாதிக்கப்பண்ணுவதாகவும் அமையும்.

உண்மையாகவே நாட்டைக் கட்டியெழுப்ப விரும்புகின்ற எந்த அரசும் இதைத் தவிர்க்க வேண்டும். ஆகையால் காலதாமதமின்றி இந்த வர்த்தமானியை மீளக் கை வாங்குமாறு அவசரமாகக் கோருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச நாணய நிதியம் இலங்கையை விட்டு வெளியேறும் அபாயம்

## ஐ.எம்.எவ். தொடர்பில் ரணில் பரபரப்புத் தகவல்

சர்வதேச நாணய நிதியம் இலங்கையை விட்டு வெளியேறும் அபாயம் உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



மின்சாரக் கட்டண மறுசீரமைப்பு தொடர்பான அறிவித்தலை மார்ச் 31ஆம் திகதிக்குள் நிறைவு செய்யுமாறு சர்வதேச நாணய நிதியம், அரசாங்கத்துக்கு அறிவித்திருந்தாலும், அந்தத் திட்டத்தை செயல்படுத்தத் தவறியமை சிக்கலாக மாறியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் ஐந்தாவது தவணையான 344 மில்லியன் டொலர் ஏப்ரல் முதல் இரண்டு வாரங்களில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

**கட்டண மறுசீரமைப்பு**

எனினும், சர்வதேச நாணய நிதியம் சமர்ப்பித்த திட்டங்களை செயல்படுத்துவதில் தொடர்ந்து தாமதம் ஏற்படுவதால் அந்தத் தொகையை வழங்குவதை மேலும் தாமதப்படுத்தும்.

மின்சாரக் கட்டண மறுசீரமைப்பு தொடர்பான இறுதி அறிக்கை இன்னும் சமர்ப்பிக்கப்படாததால், 344 மில்லியன் டொலர்களை பெறுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவிடம் ஒப்புதல் பெறுவதற்கு நேரம் எடுக்கும் என்றும் ரணில் சுட்டிக்காட்டியுள்ளார்.

**நிதி ஒதுக்கீடு**

இந்தப் பிரச்சினைகள் காரணமாக உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீடும் ஆபத்தில் உள்ளது என அவர் கூறினார்.

தொழிலாளர் அமைச்சரும் பொருளாதார மேம்பாட்டு பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, சமீபத்தில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தும்போது, ஜூன் மாதத்துக்குள் மின்சாரக் கட்டண விடயங்களில் உள்ள சில சிக்கல்கள் தீர்க்கப்பட்டுவிட்டதாகவும் பொருத்தமான முறையில் முன்னேறுவது குறித்து சர்வதேச நாணய நிதியத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மகளிர் அணிகளுக்கிடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர்

## இந்திய அணியுடனான போட்டியில் இலங்கை வெற்றி

இந்தியா, இலங்கை, தென் ஆபிரிக்க மகளிர் அணிகளுக்கிடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்று (04) நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா - இலங்கை அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த இந்தியா 50 ஓவர்களில் 09 விக்கெட்டுகளை இழந்து 275 ஓட்டங்கள் எடுத்தது. இந்திய தரப்பில் அதிகபட்சமாக ரிச்சா கோஷ் 58 ரன் எடுத்தார். இலங்கை தரப்பில் சுகந்திகா குமாரி, சமாரி அத்தபத்து தலா 03 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

தொடர்ந்து 276 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இலங்கை 49.1 ஓவரில் 07 விக்கெட்டை மட்டும் இழந்து 278 ஓட்டங்கள் எடுத்து 03 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இலங்கை தரப்பில் அதிகபட்சமாக நிலக்ஷி டி சில்வா 56 ஓட்டங்கள் எடுத்தார். இந்தியா தரப்பில்



ஸ்னே ராணா 03 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்த ஆட்டத்தில் தோல்வி கண்டாலும் இந்திய அணி புள்ளிப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது. இந்திய அணி தனது அடுத்த லீக் ஆட்டத்தில் வரும் 07ஆம் திகதி தென் ஆபிரிக்காவை எதிர்கொள்கிறது.

# மத்ரஸா மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா

*(அஷ்ரப் ஏ சமத்)*

கல்கிஸ்ஸ, வட்டரப்பொல வீதி ஜும்ஆ பள்ளிவாசலில் நடத்தப்படுகின்ற அல்-மத்ரஸதுல் ரஹ்மானியாவின் குர்ஆன் கற்கும் மாணவ மாணவிகள் வருடாந்த திறமைகளை வெளிக்காட்டிய






நிகழ்ச்சிகளும் அம்மாணவர்களுக்கு சான்றிதழ் பரிசுகள் வழங்கும் நிகழ்வும் பள்ளிவாசலின் நிர்வாக சபைத் தலைவர் பைஸர் ஹாஜி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரபல மார்க்க சொற்பொழிவாளர் அப்துல்லாஹ் மனசாஹ் அஹ்மானி கலந்துகொண்டு பரிசுகளையும் மார்க்க சொற்பொழிவுகளையும் நிகழ்த்தினார். அத்துடன், இவ் குர்ஆன் பாடசாலையின் பிரதம இமாம்கள், மௌலவிமார்கள், அஷ்ஷேக் அப்துல்லாஹ் பஹ்ருஸ், ஹிஜாஸ் சுலைமானி பாசிஹ் றில்வான் போன்றவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கிவைத்தனர்.

இந்நிகழ்வில் கல்கிஸ்ஸ வட்டார வாழ் முஸ்லிம் பெற்றோர், உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாகக் குழு உறுப்பினர்களும் ஊடகவியலாளர் மௌலானாவும் கலந்துகொண்டனர்.

## ‘தமிழக மீனவர்களின்...

இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்து வைக்கப்பட்டுள்ள படகுகளில் 34 படகுகளை உடைத்து ஆழ்கடலில் மூழ்கடிக்க சிங்கள அரசு திட்டமிட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் பெரும் அதிர்ச்சியளிக்கின்றன. தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை முற்றிலும் அழிக்கும் நோக்குடன் இலங்கை அரசு செயற்படுத்தவுள்ள இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது.

இலங்கை அரசின் மீன்வளம் மற்றும் கடல்வளத்துறை சார்பில் அந்நாட்டு அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள பரிந்துரையில், இலங்கை கடல் பகுதியில் மீன்வளத்தைப் பெருக்கும் நோக்குடன் ஆழ்கடலில் செயற்கையான பவளப்பாறைகளை வளர்க்கலாம். இதற்காக முதற்கட்டமாக 34 படகுகளை உடைத்து மூழ்கடிப்பதன் மூலம் பவளப்பாறைகளை எளிதாக வளர்க்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசின் முதன்மை நோக்கம் பவளப்பாறைகளை வளர்த்து மீன்வளத்தைப் பெருக்குவது என்பதை விட, தமிழக மீனவர்களின் படகுகளை சிதைத்து, அவற்றை அவர்களுக்கு ஒருபோதும் கிடைக்கச் செய்யாமல் தடுப்பதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை நிரந்தரமாக ஒழிப்பது தான். இலங்கை அரசின் இந்தத் திட்டம் செயல்வடிவம் பெற்றால் தமிழக மீனவர்கள் வாழ வழியின்றி வாட நேரிடும்.

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை ஆண்டுக்கணக்கில் சிறை வைப்பது, கோடிக்கணக்கில் அபராதம் விதிப்பது, படகுகளை பறிமுதல் செய்வது என தமிழக மீனவர்களின் வாழ்வாதாரங்களை அழிக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் சிங்கள அரசு, அதன் அடுத்தகட்டமாகத் தான் படகுகளை சிதைத்து மூழ்கடிக்கும் திட்டத்தை செயல்படுத்தத் துடிக்கிறது.

2021ஆம் ஆண்டில் தொடங்கி இன்று வரையிலான நான்காண்டுகளுக்கும் கூடுதலான காலத்தில் தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான 174 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. முதற்கட்டமாக 34 படகுகளை அழிக்கத் திட்டமிட்டுள்ள இலங்கை அரசு, அடுத்தடுத்தக் கட்டங்களில் மீதமுள்ள படகுகளையும் அழிக்க முனையும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த விவகாரத்தில் மத்திய அரசு தலையிட்டு, தமிழக மீனவர்களின் படகுகளை அழிக்கும் திட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். அத்துடன் இலங்கை அரசிடம் உள்ள தமிழக மீனவர்களின் படகுகளை மீட்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## 10 வருட...

நாடு முழுவதும் கடந்த பத்து ஆண்டுகளில் நடந்த வேலைநிறுத்தங்கள் காரணமாக சுமார் 300 கோடி ரூபாவுக்கும் மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக சமீபத்திய புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

அந்தக் காலகட்டத்தில் 386 வேலைநிறுத்தங்கள் நடந்ததாகவும் அந்த வேலைநிறுத்தங்களால் நாடு 662,388 வேலை நாட்களை இழந்ததாகவும் அவர் கூறினார். கடந்த 10 வருடங்களில் வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து பதினைந்தாயிரத்து முந்நூற்று ஐம்பத்தாறு என்றும், 2018 ஆம் ஆண்டிலேயே அதிக எண்ணிக்கையிலான வேலைநிறுத்தங்கள் நிகழ்ந்ததாகவும் வசந்த அத்துகோரள தெரிவித்தார். அந்த ஆண்டு நடந்த வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை 51 என்று அவர் கூறினார்.

கல்வி, சுகாதாரம், பெருந் தோட்டங்கள், போக்குவரத்து மற்றும் ஆடை போன்ற துறைகளில் அதிக எண்ணிக்கையிலான வேலைநிறுத்தங்கள் நடந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையில் தற்போது செயல்படும் தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 2,122 ஆகும்.

## தீவிரவாதிகள்...

சென்னையில் இருந்து நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) காலை 10.26 மணிக்கு கொழும்புக்கு 229 பயணிகளுடன் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பயணிகள் விமானம் புறப்பட்டது. இதற்கிடையில், காலை 11 மணியளவில், சென்னை விமான நிலைய இயக்குநர் அலுவலகத்துக்கு மின்னஞ்சல் ஒன்று வந்தது. அதில் சென்னையிலிருந்து காலை 10.26 மணிக்கு இலங்கைக்கு புறப்பட்டுச் செல்லும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில், காஷ்மீரில் பயங்கரவாத செயலில் ஈடுபட்ட 06 பயங்கரவாதிகள் பயணம் செய்கின்றனர். அவர்களிடம் வெடிகுண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்கள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதையடுத்து, சென்னை விமான நிலையத்தில் இருந்து, கொழும்பு விமான நிலையத்துக்கு அவசரமாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கொழும்பு விமான நிலையத்தில் முழு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பகல் 11.59 மணியளவில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பயணிகள் விமானம் கொழும்பு விமான நிலையத்தில் தரையிறங்கியதும் பாதுகாப்புப் படையினர், அதிரடிப் படையினர், விமானத்தைச் சுற்றி வளைத்து கொண்டு தீவிர சோதனைகள் நடத்தினர்.

பயணிகள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக சோதனை நடத்தி, அவர்களின் விவரங்களை சேகரித்தனர். சோதனை முடிவில், பயங்கரவாதிகள் யாரும் இல்லை என்பது உறுதியானது. இந்த மிரட்டல் மின்னஞ்சல், வழக்கம் போல் சென்னை விமான நிலையத்துக்கு வரும் மின்னஞ்சல் என்பது தெரியவந்தது. இதனால் சென்னை விமான நிலையத்திலும் கொழும்பு விமான நிலையத்திலும் பரபரப்பு ஏற்பட்டது. இது தொடர்பாக, சென்னை விமான நிலைய பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பதில் அமைச்சர்கள்...

கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராகவும் டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, டிஜிட்டல் பொருளாதார பதில் அமைச்சராகவும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பாதுகாப்பு பதில் அமைச்சராகவும் வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பெண்...

தற்கொலை குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட இருவர் கிட்டத்தட்ட 16 ஆண்டுகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது கடந்த வாரம் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் தெரியவந்தது.

கடந்த புதன்கிழமை விசாரணை தொடங்கியபோது, மொரிஸ் என்ற செல்வராஜா கிருபாகரன் மற்றும் தனுஷ் என்ற தம்பையா பிரகாஷ் ஆகிய இருவரின் சட்டத்தரணிகள் தங்கள் கட்சிக்காரர்களை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றத்தை கோரினர். வழக்குத் தொடரை வழிநடத்திய அரச சட்டத்தரணி தம்மிக உடவத்த, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பிணை வழங்குவதை எதிர்த்தார். மேலும் வழக்குத் தொடரின் ஆட்சேபனையை ஏற்றுக்கொண்டு கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.எஸ். சப்புவிட்ட பிணை வழங்குவதற்கான கோரிக்கையை நிராகரித்தார். குற்றம் சாட்டப்பட்டவர்களை எந்த நிபந்தனையின் கீழும் பிணையில் விடுவிக்குமாறு பிரதிவாதிகள் கோரியிருந்தாலும், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான விசாரணை இப்போது தொடங்கியுள்ளதால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டால் அது வழக்குக்கு தடையாக இருக்கும் என்று உடவத்த கூறினார்.

ஒக்டோபர் 09, 2008 அன்று பொரலஸ்கமுவவில் நடந்த தாக்குதலில் மைத்ரிபால சிறிசேனவின் பாதுகாப்பு அதிகாரிகள் நால்வர் கொல்லப்பட்டனர்.

சண்முகராசா கஜாலினி என அடையாளம் காணப்பட்ட தற்கொலை குண்டுதாரி சிறிசேனவை கொலை செய்யும் நோக்கில் தாக்குதலை நடத்த உதவியதாகவும், உடந்தையாக செயல்பட்டதாகவும் உட்பட 17 குற்றச்சாட்டுகளின் கீழ் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

புதன்கிழமை சாட்சியமளித்த முன்னாள் ஜனாதிபதி சிறிசேன, இந்தச் சம்பவத்தால் மிகவும் அதிர்ச்சியடைந்ததாகவும் அதன் பிறகு சுமார் இரண்டு வாரங்கள் நித்திரையின்றி கடுமையான மன அழுத்தத்தால் அவதிப்பட்டதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார். சம்பவம் குறித்து எந்த பொலிஸ் அதிகாரியும் தனது வாக்குமூலத்தைப் பதிவு செய்யவில்லை என்றும் சிறிசேன மேலும் கூறினார்.

தாக்குதலை நினைவுகூர்ந்த முன்னாள் ஜனாதிபதி, மொபைல் போனில் யாரோ ஒருவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு பெண் தங்கள் வாகனத்தை நோக்கி வேகமாக நடந்து வருவதைக் கவனித்த பின்னர் தனது ஓட்டுநர் வாகனத்தை வேகமாக ஓட்டிச் சென்றதாகக் கூறினார். ஓட்டுநரின் விரைவான செயலால் குண்டுதாரி தனது வாகனத்தை இடைமறிக்க முடியவில்லை, தமக்கு பின்னால் இருந்த காப்பு வாகனத்தை மோதி வெடிபொருட்களை வெடிக்கச் செய்ததாக கூறினார்.

இந்தச் சம்பவம் 2008 ஆம் ஆண்டு நடந்தாலும், 2024 ஆம் ஆண்டு அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது, மேலும் கடந்த வாரம் விசாரணை தொடங்கியது. வழக்கின் மேலதிக விசாரணை செப்டெம்பர் 01ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## கிளப் வசந்த...

கிளப் வசந்த கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான லொக்கு பெட்டி எனப்படும் சுஜீவ ருவன் குமார டி சில்வா இலங்கை பொலிஸ் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் நேற்று (04) காலை 7:43 மணியளவில் டுபாயிலிருந்து விமானம் மூலம் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. முன்னதாக இவர் பெலாரஸில் கைதுசெய்யப்பட்டார்.

2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் 08ஆம் திகதி அத்துருகிரிய பகுதியில் உள்ள பச்சை குத்தும் நிலையமொன்றின் திறப்பு விழாவுக்கு சென்ற சுரேந்திர வசந்த பெரேரா எனும் கிளப் வசந்த என்பவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான லொக்கு பெட்டி கொலை செய்யத் திட்டம் தீட்டி பணம் கொடுத்ததாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மேற்கு மாகாண குற்றப் பிரிவின் தெற்குப் பிரிவைச் சேர்ந்த சிறப்பு அதிகாரிகள் குழுவிடம் ஒப்படைப்பார்கள் என்று உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல்...

மாணவர்களுக்கும் விடுமுறை வழங்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

மேலும், தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பணிக்குழாமினருக்கும் மாணவர்களுக்கும் குறித்த தினத்தில் விடுமுறை வழங்குமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் தேர்தல் அலங்கரிப்பு மற்றும் பிரசார நடவடிக்கை தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு விசேட அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

# தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 22ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்** பயணங்களில் இடையூறு ஏற்படும். உடல் நோய்களை அசட்டை செய்யாதீர்கள். வீண் டென்ஷன் வேண்டாம்.

**ரிஷபம்** யாரையும் நம்பமுடியாமல் தவிப்பீர்கள். எதிர்கால வாழ்வுக்கு திட்டமொன்றைத் தீட்டுவீர்கள். மனப் போராட்டம் இருக்கும்.

**மிதுனம்** இன்ப அனுபவங்களால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும். தொழில் சிறப்புகள் உண்டு.

**கடகம்** பணம், பொருள் விரையமாவதை எண்ணிக் கவலையடைவீர்கள். நினைத்த காரியங்கள் சற்றுத் தாமதமாகி நடக்கும்.

**சிம்மம்** மனதில் ஒருவித படபடப்புத் தன்மை இருக்கும். வீண் வம்பு சண்டையை விலை கொடுத்து வாங்காதீர்கள்.

**கன்னி** வீண் பணவிரயமும் மருத்துவச் செலவுகளும் ஏற்படும். கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது. நல்லதையே நினையுங்கள்.

**துலாம்** தொழில், வியாபார இலாபம். எதிர்ப்பார்த்திருந்த வெளிநாட்டுப் பயணம் அமையும். திடீர் தன இலாபங்கள் உண்டு.

**விருச்சிகம்** நண்பரிடம் கேட்ட உதவி திடீரெனக் கிடைக்கும். தொழில் முயற்சிகள் கைகூடும். புகழ், செல்வாக்கு உண்டு.

**தனுசு** வீண் மனப் பயத்தால் உடல் நோய்கள் ஏற்படும். மறைமுக விரோதிகளின் தொல்லை. உடலைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

**மகரம்** தொழில் விடயத்தில் கவனமாக இருக்காவிட்டால் வீண் பழி வரலாம். உடல் நோய்கள் கவனம். செலவுகள் உண்டு.

**கும்பம்** விஷேட விருந்துபசாரத்தில் கலந்து கொள்வீர்கள். மனைவியால் அதிக நன்மைகளைப் பெறுவீர்கள். காதல் நிறைவேறும்.

**மீனம்** புது நண்பர்கள் அறிமுகமாவார்கள். பகைவர்கள் விலகிச் செல்வார்கள். தற்காலிக தொழில், வியாபார இலாபங்கள் உண்டு.

| | |
|---|---|
| திதி: | அட்டமி மு.ப.7.36 வரை பின் நவமி |
| நட்சத்திரம்: | ஆயிலியம் பி.ப.2.01 வரை பின் மகம் |
| பிறை: | வளர்பிறை |
| யோகம்: | சித்த யோகம்; பி.ப.2.01 வரை பின் மரண யோகம் |
| வார சூலை: | கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| நல்ல நேரம்: | காலை- 5.55 – 6.55 மணி வரை பகல் - 12.55 – 1.55 மணி வரை மாலை- 2.55 – 3.55 மணி வரை |
| ராகு காலம்: | 7.25 – 8.55 மணி வரை |
| எமகண்டம் : | 10.25– 11.55 மணி வரை |
| குளிகை: | 1.25 – 2.55 மணி வரை |

சந்திராஷ்டமம்:தனுசு-மகர ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் (பிற்பகல் 2.01 வரை தனுசு ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பிற்பகல் 2.01 வரை**

அஸ்வினி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**இன்று பிற்பகல் 2.01 மேல்**

பரணி, கார்த்திகை, மிருகசீரிடம்,புனர்பூசம், ஆயிலியம்,பூரம்,உத்திரம், சித்திரை, விசாகம்,கேட்டை,பூராடம், உத்திராடம், அவிட்டம்,பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# ஜனாதிபதிக்கும் வியட்நாம் கம்யூனிஸக் கட்சியின் பொதுச் செயலாளருக்குமிடையில் சந்திப்பு





வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று (04) பிற்பகல் ஹனோயில் உள்ள வியட்நாம் கம்யூனிஸக் கட்சியின் (CPV) மத்திய குழுத் தலைமையகத்தில் கம்யூனிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் டோ லாமை (T Lm) சந்தித்துக் கலந்துரையாடினார்.

வியட்நாம் மற்றும் இலங்கைக்கிடையிலான 55 ஆண்டுகால இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் கலந்துகொண்டார்.

# பிரதமர் ஹரிணியைச் சந்தித்தார் ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர்





ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் நகதானி, நேற்று (04) அலரி மாளிகையில் இலங்கை பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரியவை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு நீண்டகால இருதரப்பு நட்பின் காரணமாக நடைபெற்றது. மேலும் பாதுகாப்புத் துறைகளில் ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் கவனஞ்செலுத்தியது.

ஜப்பான் அரசாங்கத்தின் சார்பாக அமைச்சர் நகதானி இந்தோ-பசுபிக் பிராந்தியம் முழுவதும் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிசெய்வதில் கூட்டு முயற்சிகளுக்கு ஜப்பானின் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தினார்.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிராந்திய இணைப்பில் இலங்கையின் மூலோபாய முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மூலம், ஜப்பானின் தொடர்ச்சியான ஆதரவுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். வெளிப்படைத்தன்மை, பொருளாதார சீர்திருத்தம் மற்றும் தேசிய மாற்றத்துக்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இலங்கையின் பாதுகாப்புப் படைகளின் பங்களிப்பை காலநிலை மாற்றம், மனிதாபிமான உதவி மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்ற பொறுப்புகளை உள்ளடக்கியதாக மாற்றுவதற்கான அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையையும் பிரதமர் பகிர்ந்து கொண்டார். வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாவில் உள்ள வாய்ப்புகளை இந்தச் சந்திப்பு மேலும் ஆராய்ந்தது. இரு தரப்பினரும் ஐந்து முக்கிய துறைகளில் ஈடுபாட்டை ஆழப்படுத்த ஒப்புக்கொண்டனர்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக 65,000 பொலிஸார் பாதுகாப்புக் கடமையில்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சுமார் 65,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இவர்கள் நேற்று (04) முதல் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

தேவையேற்படின் தேர்தல் நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினரை இணைத்துக்கொள்ள எதிர்பார்ப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்தார்.

இதற்கமைய பொலிஸாரால் நடமாடும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்போது எவரேனும் சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்களாயின் அவர்களைக் கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் கூறினார்.

அத்துடன், அமைதிக் காலப்பகுதியில் தேர்தல் சட்டத்தை மீறி செயற்படும் நபர்களுக்கெதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்தார்.

# கொட்டாஞ்சேனை மாணவி உயிர்மாய்ப்பு விவகாரம்; விசாரணை அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்க பணிப்பு

கொழும்பு, கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த 15 வயதான பாடசாலை மாணவி கட்டிடத்திலிருந்து கீழே வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறு உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் தெரிவித்தார்.

அறிக்கை கிடைத்தவுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனவும் அமைச்சர் கூறினார்.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பான உண்மைகள் கண்டறியப்பட்டு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் உறுதியளித்தார்.

கொழும்பு, கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த 15 வயதான சிறுமியொருவர் கடந்த மாதம் 29ஆம் திகதி கட்டிடமொன்றிலிருந்து கீழே வீழ்ந்து உயிரிழந்தார்.

குறித்த சிறுமி ஏற்கனவே கல்விகற்ற கொழும்பின் பிரபல பாடசாலையொன்றின் ஆசிரியர் ஒருவரால் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டதாக தெரிவித்து கடந்த வருடம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பிரபல பாடசாலையொன்றின் ஆசிரியர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், வழக்கு விசாரணைகள் தற்போது நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இளைஞரொருவரை கொலைசெய்து எரித்த சம்பவம்; பிரதான கொலைச் சந்தேகநபர் உள்ளிட்ட மூவர் கைது

கல்கிசை, ஹுலுடகொட பகுதியில் இளைஞரொருவரைக் கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொலைசெய்துவிட்டு, சடலத்தை எரித்த சம்பவம் தொடர்பில் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மேல் மாகாண தெற்கு குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் கொலையில் நேரடியாகத் தொடர்புடைய இரண்டு முக்கிய சந்தேக நபர்களும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர்களைக் கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட இரண்டு கத்திகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொலைசெய்யப்பட்ட நபர் ரத்மலானை மஹிந்தராம வீதியில் வசித்து வந்த 23 வயதுடைய காவிந்த கயாஷன் ரணவக்க ஆவார்.

இறந்தவரின் தாயார், தனது மகனைக் காணவில்லையென்று கடந்த 29ஆம் திகதி இரவு கல்கிசை பொலிஸில் முறைப்பாடளித்திருந்தார்.

இதற்கிடையில், இந்தக் கொலை நடந்த பிறகு, 'மொரட்டுவ பாதாளக் குழு' என்ற சமூக ஊடக தளத்திலும் இது விளம்பரப்படுத்தப்பட்டது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில், தலைமைப் பொலிஸ் ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

# ஆட்பதிவு திணைக்களம் இரு நாட்களுக்கு பூட்டு

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் சேவைகள் மே 06 மற்றும் 07ஆம் திகதிகளில் இடம்பெறாது என ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அறிவித்தலொன்றை விடுத்துள்ள ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.எஸ்.பீ. சூரியப்பெரும இதனைத் தெரிவித்துள்ளார்.

மே 06ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் காரணமாக, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சூரியப்பெரும குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, ஒரு நாள் சேவை உள்ளிட்ட அனைத்து சேவைகளும் இடம்பெறாது என அவர் தனது அறிவிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஒன்பதாவது மாநாடு; திருச்சியில் ஏற்பாடு – இலங்கையிலிருந்து 60 பேர் பங்கேற்பு

**(அஷ்ரப் ஏ. சமத்)**

உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஒன்பதாவது மாநாடு மே மாதம் 9 - 11ஆம் திகதிவரை இந்தியா திருச்சியில் மிக நீண்டகாலமாக இயங்கிவரும் பிரசித்தி பெற்ற பொறியியற் கல்லூரியான எம்.ஐ.இ.டி. பொறியியல் பல்கலைக்கழகக் கல்லூரியில் நடைபெறுகிறது.

இலங்கை பேராளர்கள் இணைப்பாளர்களாக பொறியியலாளரும் கவிஞருமான நியாஸ் ஏ. சமத் மற்றும் டாக்டர் கவிஞர் தாசீம் அகமத் ஆகியோர் கடந்த இரண்டு மாதங்களாக செயற்படுகின்றனர். இலங்கை எழுத்தாளர்களது ஆக்கங்கள், கட்டுரைகள், மாநாட்டில் இணைக்கப்பட்டுள்ளன. அம் மலர்கள் மாநாட்டின்போது வெளியிட்டு வைக்கப்படுகின்றன.

இலங்கையிலிருந்து முஸ்லிம் எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் உட்பட 60 பேராளர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்காக மே 7 ஆம் 8 ஆம் திகதிகளில் திருச்சி பயணமாகின்றனர்.

இம்மாநாட்டில் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மத்திய கிழக்கு நாடுகளில் வாழும் முஸ்லிம் அறிஞர்கள், அரசியல் பிரமுகர்கள் என ஐநூறுக்கும் மேற்பட்ட சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். இம்மாநாட்டின் ஆரம்ப விழாவில் பிரதம அதிதியாக தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி ஸ்டாலின் கலந்துகொள்ளவுள்ளார். தொடக்க விழா 09.05.2025 வெள்ளிக்கிழமை பி.பகல் 04.00 மணிக்கு பேராசிரியர் முனைவர் சே.மு.மு. முஹம்மதலி (தலைவர் இஸ்லாமிய இலக்கியக் கழகம்) தலைமையில் நடைபெறும்.

வரவேற்புரையை பொதுச் செயலாளர் இஸ்லாமிய இலக்கியக் கழகம் மு.இ.அகமது மரைக்காயர் நிகழ்த்துவார். அத்துடன், பிரதி முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு அமைச்சர் கே.என் நேரு, சா.மு நாசர். மு.பெ. சாமிநாதன், கல்வி அமைச்சர் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு சட்டசபைத் தலைவர் மு.அப்பாவு, மலேசியா, சிங்கப்பூர் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மலேசியா பா.உ. டத்தோ எம்.சரவணன், டத்தோ முஹம்மது இக்பால், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே.எம்.பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீன் முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குவார்கள்.

இலங்கை சார்பில் ரவூப் ஹக்கீம் பா.உ. பிரதி சபாநாயகர் டாக்டர் றிஸ்வி சாலி, பிரதியமைச்சர் முனீர் முசப்பர், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பா. உ. ரிசாத் பதியுதீன், பா.உ, நிசாம் காரியப்பர், பா.உ மற்றும் என்.எம். அமீன், தமது படைப்புகளை முன்வைத்து தமது துறை சார்ந்த அரங்குகளில் கருத்துரைகளை வழங்குவார்கள். பாலமுனை பாரூக், ரவூப் ஹஸீர், புர்கான் பீ. இப்திகார், நஜ்முல் ஹுசைன், அலி அக்பர், ஜெஸ்மின் முசா, பேராசிரியர் பி.எம். ஜமாஹிர், அக்கரைப்பற்று ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் யு.எல்.எம்.ஹசீம் ஹில்மி அஹமட் லெப்பை, நூறுல் நஜ்முல் ஹுசைன் ஆகியோர் அரங்கில் தாம் சார்ந்த படைப்பிலக்கியங்களை முன்வைக்கவுள்ளனர். இம்மாநாட்டில் இலக்கியச் சுடர் விருது கவிஞர் பாலமுனை பாறுக் காரை இறையடியான் நினைவாக இந்தியப் பணம் 20




ஆயிரமும் பொற்கிழியும் இலக்கியச் சுடர் விருதும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன், ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் (பா.உ.) தமிழ் கவிதை நூலான 'அந்த கல்முனைக்குடி நாட்கள்' மற்றும் ஜெஸ்மி எம்.மூசாவின் 'அஷ்ரப் எனும் இலக்கியம்', காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீனின் 'இயேசு என்னும் ஈசா நபி காவியம்', மறினா இல்யாஸின் 'என் சிறகில் சிக்கிய வானம்' எனும் இலங்கை குழுவினர்களின் நூல்களும் மாநாட்டில் வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸ்துமா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் தற்போது ஆஸ்துமா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உலகளவில் ஒவ்வொரு 100,000 பேரில் 3,340 பேர் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக களுபோவில போதனா வைத்தியசாலையின் சுவாச நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ஆஷா சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

நாளை 06ஆம் திகதி உலக ஆஸ்துமா நோய் தினமாகும்.

உலகளவில் இளைஞர்களிடையே ஆஸ்துமா அதிகரித்துள்ளது. இன்ஹேலர் அடிப்படையிலான சிகிச்சையானது பக்க விளைவுகளை ஏற்படுத்தாமல் ஆஸ்துமாவை திறம்பட நிர்வகிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மக்கள் மத்தியில் ஆஸ்துமா பரவலாக இருந்தாலும், நாட்டில் பல தனிநபர்கள் கண்டறியப்படாமல் உள்ளனர் என சுவாச நோய் வைத்திய நிபுணர் சமன்மலி தல்பதடு குறிப்பிட்டுள்ளார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மே 05 ஆம் திகதி, திங்கட்கிழமை

# கனேடிய புதிய அரசின் கவனம் அவசியமானது!

கனடாவில் கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி பெற்றது. அந்த வெற்றிக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் அறிவிப்புகள் காரணமாகியிருக்கின்றன என்றாலும் மிகையில்லை.

மொத்தம் உள்ள 343 இடங்களில் லிபரல் கட்சி 169 இடங்களைக் கைப்பற்றியிருக்கிறது. பெரும்பான்மைக்கு 03 இடங்கள் தான் குறைவு என்பதால் சிறிய கட்சியின் ஆதரவுடன் மார்க் கார்னி மீண்டும் பிரதமராவது உறுதியானது. ஆட்சியைப் பிடிக்குமென்று கணிக்கப்பட்ட கன்சர்வேட்டிவ் கட்சி கடந்த தேர்தலைவிட 7.7 சதவீதம் அதிக வாக்குகளைப் பெற்றாலும் 144 இடங்களுடன் திருப்தியடைய வேண்டியதாயிற்று.

இந்திய காலிஸ்தான் அமைப்பின் ஆதரவான ஜக்மீத் சிங்கின் புதிய ஜனநாயகக் கட்சி கடந்த தேர்தலில் 25 இடங்களில் வென்றிருந்தது. ஆட்சியிலும் ஆதிக்கம் செலுத்தி வந்தது. இப்போது ஜக்மீத் சிங், அவர் போட்டியிட்ட பர்னாபி மத்திய தொகுதியிலேயே தோல்வியுற்றதுடன், வெறும் ஏழு இடங்களில் மட்டுமே அந்தக் கட்சி வென்றிருக்கிறது. அந்தக் கட்சியின் வாக்கு சதவீதமும் 2021 தேர்தலில் 18 சதவீதமாக இருந்தது. இப்போது ஆறு சதவீதமாகச் சுருங்கிவிட்டது. இதற்கு முந்தைய மூன்று தேர்தல்களில் லிபரல் கட்சிக்கு வெற்றி தேடித்தந்த பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் செல்வாக்கு, நாட்டின் பொருளாதார வீழ்ச்சி, உணவுப் பொருட்கள் மற்றும் வீடுகளின் விலை தாறுமாறாக அதிகரித்தமை, உட்கட்சிப் பூசல் ஆகியவற்றின் காரணமாகப் பெரும் சரிவைக் கண்டது.

கடந்த 2022ஆம் ஆண்டுக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கருத்துக் கணிப்புகளிலும் லிபரல் கட்சிக்கான செல்வாக்கு தொடர்ந்து சரிவையே கண்டு வந்தது. கடந்த 2021இல் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டபோது ட்ரூடோவுக்கு 63 சதவீத ஆதரவு இருந்தது. அது கடந்த ஜூனில் 28 சதவீதமாகக் குறைந்தது. இந்த ஆண்டு ஜனவரியில் ட்ரூடோ இராஜிநாமா செய்தபோது அவரது கட்சிக்கு வெறும் 20 சதவீதம் தான் ஆதரவு இருந்தது. மறுபுறம், கன்சர்வேடிவ் கட்சிக்கான ஆதரவு 45 சதவீதமாக அதிகரித்திருந்தது.

எனினும், கனேடிய பிரதமர் பதவியிலிருந்து ட்ரூடோ இராஜிநாமா செய்தது, அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றது ஆகியவை கனேடிய அரசியலில் எதிர்பாராத திருப்பத்தை ஏற்படுத்தின.

தான் பதவியேற்றது முதலே அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிவரும் ட்ரம்ப், கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக இணைத்துக்கொள்வேன் என்று சூளுரைத்தார். கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படுமென்றும் அறிவித்தார்.

பொருளாதார நிபுணராக இருந்து அரசியலுக்குள் நுழைந்து குறுகிய காலத்திலேயே பிரதமரான மார்க் கார்னி, ட்ரம்ப்பின் இந்த அடாவடி அறிவிப்புகளை நன்கு பயன்படுத்திக் கொண்டார் என்றுதான் சொல்ல வேண்டும். அமெரிக்காவுக்கு அடிபணியமாட்டோம் என்று உரக்கக் கூறியதுடன் அமெரிக்க துரோகத்தை மையமாக வைத்தே மார்க் கார்னியின் தேர்தல் பிரசாரம் அமைந்தது.

கார்னியின் ஆவேசமான பிரசாரம் வாக்காளர்களிடையே ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தியதால் தோல்வியின் விளம்பில் இருந்த லிபரல் கட்சி கடந்த தேர்தலைவிட 10.9 சதவீதம் கூடுதல் வாக்குகளைப் பெற்று எதிர்பாராத வெற்றியுடன் தொடர்ந்து 4ஆவது தடவையாக ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்காவுக்கு முன்னுரிமை என்று ட்ரம்ப் பிரசாரம் செய்ததைப்போல கனடாவுக்கு முன்னுரிமை என்று கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் பியர் பொய்லியேவ்ரே பிரசாரம் மேற்கொண்டாரென்றாலும், ஜனாதிபதி ட்ரம்ப்பின் அறிவிப்புகளுக்கு தாமதமாக எதிர்வினை ஆற்றியதால் அவரது பிரசாரம் எடுபடவில்லை.

2025 கனேடிய பொதுத் தேர்தலில் (ஏப்ரல் 28, 2025) மூன்று ஈழத்தமிழ் வம்சாவளியினர் வெற்றி பெற்றனர்.

அனிதா ஆனந்த் (Oakville கிழக்கு தொகுதி), கரி ஆனந்தசங்கரி (Scarborough-Guildwood-Rouge Park தொகுதி) யுவனிதா நாதன் (Pickering–Brooklin தொகுதி) ஆகியோர் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்டவர்கள்.

கரி ஆனந்தசங்கரி 34,941 வாக்குகளுடன் 63.89% வாக்குகளைப் பெற்று மிகப்பெரிய வெற்றியை பதிவு செய்தார். அனிதா ஆனந்த் மற்றும் ஹரி ஆனந்தசங்கரிக்கு மீண்டும் அமைச்சர் பதவிகள் வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தம் ஆறு தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். ஆனால், மற்ற மூவர் (கன்சர்வேட்டிவ் மற்றும் பசுமை கட்சிகளைச் சேர்ந்தவர்கள்) வெற்றி பெறவில்லை. லிபரல் கட்சி சிறுபான்மை அரசாக ஆட்சியைத் தொடர்கிறது.

சர்வதேச போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்பட்டு ஈழத்தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற விடயத்தில் கனடா எப்போதும் உறுதியாக இருந்து வருகிறது. போரினால் பாதிக்கப்பட்டு அகதிகளாகச் சென்ற இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை இதுவரை அரவணைத்துக் கொண்டிருக்கிறது கனடா. போர்க்குற்ற விசாரணைகளுக்கு அழுத்தம் கொடுத்துவரும் கனடா அவற்றில் ஈடுபட்ட குற்றவாளிகளை அடையாளம் கண்டு அவர்கள் தொடர்பில் இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது.

இப்போது புதிய ஆட்சியும் இந்தப் பணியை செவ்வனே முன்னெடுத்து இலங்கையில் தமிழருக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க செயற்படவேண்டும். கரி ஆனந்தசங்கரி ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளை, தேவைகளை அக்குவேறாக அறிந்தவர். தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென அவர் ஏராளமான தடவைகள் ஜெனீவா மனித உரிமைகள் பேரவைக்கும் சென்றுவந்தவர். அரசியல் அதிகாரம் கையில் இல்லாதபோதே அப்படிச் செயற்பட்ட அவரைக்கொண்டு இப்போது கனேடிய அரசு, ஈழத்தமிழர் விடயத்தை - அவர்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்கும் விடயத்தை கவனிக்கலாம்.

இலங்கையின் புதிய அரசு புதிய அரசியலமைப்பை கொண்டுவரப்போவதாக அறிவித்துள்ளது. அதேசமயம், தமிழர்களின் காணிகள் ஆக்கிரமிப்பு, தமிழர் பகுதிகளில் விகாரைகளைக் கட்டுதல் போன்ற செயற்பாடுகள் அமைதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புதிய அரசியலமைப்பில் தமிழர் அபிலாஷைகள் உள்வாங்கப்படுமா, ஒற்றையாட்சியின் கீழ் ஏற்கனவே இருந்த கொஞ்சநஞ்ச உரிமைகளும் இல்லாமல் போகுமா? என்பதை சர்வதேச சமூகம் மிகவும் அவதானத்துடன் கவனிக்க வேண்டும். கனடாவுக்கு அதில் முக்கிய பங்கிருக்கிறது. கனேடிய புதிய அரசுக்கு வாழ்த்துகளைச் சொல்வதுடன் இந்த விடயங்களையும் குறிப்பிட்டு வைக்க விரும்புகிறோம்.

# செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம்

# வாய்ப்பா? ஆபத்தா?

சாட் ஜி.பி.டியுடன் பல தலைப்புகளில் கேள்வி கேட்டு அரட்டையடிக்கும்போது எல்லோருக்கும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. ஆனால், இதுபோன்ற செயற்கை நுண்ணறிவுத் (Artificial Intelligence) தொழில்நுட்பங்கள் நாளைக்கு நம்மைப் போன்ற மனிதர்களுடைய வேலைகளையெல்லாம் பறித்துக்கொண்டுவிடுமென்று சொல்கிறார்களே. இது எந்த அளவுக்கு உண்மை?

வரலாற்றில் எந்தப் புதுத் தொழில்நுட்பம் அறிமுகமாகும்போதும் முந்தைய தலைமுறைத் தொழில்நுட்பத்தைப் பின்பற்றி வந்தவர்களுக்கு சிறு நடுக்கம் உண்டாவது இயல்புதான். ஒருவேளை, தங்களால் இந்தப் புதிய திறமையைப் புரிந்துகொள்ள முடியாதோ, தங்களுடைய பழைய திறமை இனி தேவையற்றவையாகக் கருதப்படுமோ, புதியவர்கள் தங்களைப் பின்னுக்குத் தள்ளிவிடுவார்களோ என்கிற கவலைகளெல்லாம் அவர்களுக்குள் ஏற்படும்.

அந்தக் கவலைகளையே எரிபொருளாகப் பயன்படுத்திக் கொண்டு கற்றுக்கொள்வார்கள், முன்னேறுவார்கள். அதன் பிறகு அவர்கள் இந்தப் பழைய காலகட்டத்தைத் திரும்பிப் பார்த்தால் அட, இதுக்கா அச்சப்பட்டோம் என்று சிரிப்பார்கள். ஆனால், செயற்கை நுண்ணறிவென்பது அந்தத் தொழில்நுட்ப மாற்றங்களிலிருந்து மிகவும் வேறுபட்டது.

ஏனெனில், இங்கு மனிதர்கள் ஒருவரோடொருவர் போட்டியிடப் போவதில்லை. அவர்கள் சிந்திக்கக்கூடிய இயந்திரங்களோடு போட்டியிட வேண்டியிருக்கிறது. இப்படி ஒரு போட்டியை இதற்கு முன் மனிதன் எதிர்கொண்டதில்லை. அதனால், இதன் எதிர்காலத்தைப் பற்றி அவனுக்குத் தெரியவில்லை. அது அவனை மேலும் அச்சுறுத்துகிறது.

எடுத்துக்காட்டாக, ஒருவர் மளிகைக்கடையில் பணிபுரிகிறார். அவருடைய வேலை, வாடிக்கையாளர்கள் வாங்குகிற பொருட்களை வீடு வீடாகச் சென்று கொடுக்க வேண்டும். இதற்காக அவருக்கு ஒரு மிதிவண்டி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரும் அதை நன்கு பயன்படுத்தித் தன்னுடைய வேலையைச் சிறப்பாகச் செய்கிறார்.


சில ஆண்டுகளுக்குப் பிறகு அவருடைய கடை மிகப் பெரிதாக வளர்ந்துவிடுகிறது. ''இனிமேல் சைக்கிளில போய் டெலிவரி செய்கிறதெல்லாம் சரிப்படாது. பைக் ஓட்டத் தெரிஞ்ச ஒருத்தரை வேலைக்குச் சேர்க்கப்போறேன்''- என்கிறார் முதலாளி.

''வேண்டாம் முதலாளி. எனக்கு ஒரு வாரம் அவகாசம் கொடுங்க. நானே பைக் ஓட்டக் கத்துக்கறேன்''- என்கிறார் இவர். அதன்படி ஒரே வாரத்தில் இருசக்கர வண்டியை ஓட்டக் கற்றுக்கொண்டு தன்னுடைய வேலையைக் காப்பாற்றிக் கொள்கிறார். இல்லாவிட்டால், அவருடைய வேலை பைக் ஓட்டத் தெரிந்த இன்னொருவருக்கு சென்றிருக்கும்.

இன்னும் சில ஆண்டுகள் ஓடுகின்றன. அந்த மளிகைக்கடை மேலும் பெரிதாகிறது. ''இனிமேல் பைக்ல போய் டெலிவரி செய்கிறதெல்லாம் சரிப்படாது. நான் ஒரு ட்ரோன் (பறக்கும் இயந்திரம்) வாங்கப்போறேன்''- என்கிறார் முதலாளி.

இப்போது அந்தப் பணியாளர் என்ன செய்வார்? முன்பு அவரால் பைக் ஓட்டக் கற்றுக்கொள்ள முடிந்தது. ஆனால், இப்போது ட்ரோனைப் போல் பறக்க முடியாதே. அடுத்த சில ஆண்டுகளில் உலகெங்கும் பெரும் எண்ணிக்கையிலான பணியாளர்கள் கிட்டத்தட்ட இதேபோன்ற ஒரு குழப்பத்தைத்தான் எதிர்கொள்ளப் போகிறார்கள் என்கிறார்கள் வல்லுநர்கள்.

அதாவது, இப்போது மனிதர்கள் செய்கிற பல வேலைகளை செயற்கை நுண்ணறிவின் துணையோடு இயங்கும் கணினிகளோ மற்ற



இயந்திரங்களோ செய்யத் தொடங்கிவிடும். மனிதர்களால் அவற்றுடன் போட்டியிடக்கூட முடியாது. நிறுவனங்களுக்கும் இவற்றில் முதலீடு செய்வதுதான் வசதியாகவும் சிக்கனமாகவும் இருக்கும் என்பதால் இதற்குமுன் நாம் பார்த்திராத வேலையில்லாத் திண்டாட்டம் வரப்போகிறது என்பது இவர்களுடைய கணிப்பு.

**பில்கேட்ஸ், ஒபாமா கருத்து..**

இங்கு பணியாளர்கள் என்று சொல்லப்படுவோர் அடிமட்ட வேலைகளைச் செய்கிறவர்கள் (Blue-collar Workers) மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும் உள்ள எல்லாவிதமான வேலைகளையும் (White-collar Workers) செயற்கை நுண்ணறிவு பாதிக்கக்கூடும். எடுத்துக்காட்டாக, இன்றைய செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் மென்பொருள் பொறியியலாளர்களைவிடச் சிறப்பாக மென்பொருள் எழுதுகின்றன என்கிறார் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா. இதுபோன்ற வேலைகளுக்கெல்லாம் ஆபத்து வரக்கூடுமென்று யாரும் இதுவரை கற்பனைகூடச் செய்ததில்லை.

ஆசிரியர்கள், மருத்துவர்கள் போன்ற மிகுந்த திறமை தேவைப்படும் பணிகளைக்கூட வருங்காலத்தில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் கையிலெடுத்துக் கொண்டுவிடும் என்கிறார் மைக்ரோசொஃப்ட் நிறுவுனர் பில் கேட்ஸ். செயற்கை நுண்ணறிவுத் துறையில் இதுவரை ஏற்பட்டிருக்கும் மாற்றங்களையும் குறிப்பாக, முந்தைய ஓரிரு ஆண்டுகளுக்குள் அது நிகழ்த்தியிருக்கும் பாய்ச்சல்களையும் பார்க்கும்போது இந்தக் கணிப்புகள் ஓரளவு உண்மைதான் என்று ஊகிக்கலாம்.

தொழிற்சாலைகளில் செயற்கை நுண்ணறிவு நுழையாத அல்லது கட்டுப்படியாகாத இடங்களில்கூட தானியங்கியாக்கம் (Automation) நுழைந்துவிடும். இங்கு ஏற்கனவே வரையறுக்கப்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் இயந்திரங்கள் செயற்படுகின்றன. அவை சொந்தமாகச் சிந்திப்பது அடுத்த நிலை. அவ்வாறு சிந்திக்காவிட்டாலும் அவை அந்தச் செயலை நன்கு நிறைவேற்றிவிட்டால் போதும்.

எடுத்துக்காட்டாக ஒரு தொழிற்சாலையில் வெவ்வேறு பகுதிகளை ஒன்றாகச் சேர்ப்பது, நட், போல்ட் போட்டு முடுக்குவது போன்ற வேலைகளை மனிதர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்களோ அதை அப்படியே விதிமுறைகளாக மாற்றி இயந்திரங்களுக்குக் கற்றுக் கொடுத்துவிட்டால் அவை நாள் முழுக்க அதே வேலையைச் செய்து கொண்டிருக்கும்.

இதுபோல் நாள்தோறும் நாம் செய்கிற பல வேலைகளைத் தானியங்கியாக்கத்தின் மூலம் விரைவாக்கலாம், சிறப்பாக்கலாம்.

இது ஏற்கனவே நம்மைச் சுற்றி மெதுவாக நடந்து கொண்டுதான் இருக்கிறது. வருங்காலத்தில் இது இன்னும் விரைவாகப் பரவும். அதன்மூலம் பல வேலைகளுக்கு மனிதர்கள் தேவைப்படமாட்டார்கள்.

அதேநேரம், இந்த இயந்திரங்களின் மிகச் சிறப்பான செயல்திறனுக்கு வரம்புகள் உண்டு என்பதை நாம் நினைவில் வைக்கவேண்டும். அதாவது, அவற்றால் ஒரு வேலையைத் திரும்ப திரும்பப் பலமுறை சிறப்பாகச் செய்ய இயலும். அதைச் சற்று மாற்றியமைப்பது அல்லது அதில் ஏற்படக்கூடிய பிழைகளைப் புரிந்துகொண்டு திருத்துவது போன்றவற்றை அவற்றால் சமாளிக்க இயலாது. எனினும், செயற்கை நுண்ணறிவும் தானியங்கியாக்கமும் கை கோர்க்கும்போது இதிலும் பல முன்னேற்றங்கள் வருமென்று ஊகிக்கலாம்.

ஒரே வேலையைச் சோர்வின்றித் திரும்பத் திரும்பச் செய்வதில் தானியங்கியாக்கம் முன்னிற்கப் போகிறது. மனிதர்கள், அமைப்புகளின் பேச்சைப் புரிந்துகொள்வது, அதற்கேற்ப நடவடிக்கையெடுப்பது, பல இடங்களிலிருந்து தகவல்களைத் திரட்டுவது, அவற்றினடிப்படையில் அவர்களுடன் உரையாடுவது, மொழிபெயர்ப்பது போன்றவற்றில் செயற்கை நுண்ணறிவு முன்னிற்கப் போகிறது.

எனினும், இவை கருவிகள்தான். வயலையும் புல்லாங்குழலையும் வீணையையும் மிருதங்கத்தையும் சரியானபடி கோர்த்து நல்லிசையை உண்டாக்கக்கூடிய ஒரு கலைஞரைப்போல் இவற்றைச் சரியாகப் பயன்படுத்தும் திறமை வாய்ந்த மனிதர்கள் இனிமேலும் தேவைப்படுவார்கள்.

என்னதான் இயந்திரங்கள் தொடர்ந்து கற்றுக்கொண்டிருந்தாலும் ஒவ்வொரு வேலைக்கான பணியோட்டத்திலும் (Workflow) மனிதக் குறுக்கீடு தேவைப்படுகிற பல புள்ளிகள் இருக்கத்தான் செய்கின்றன. அதாவது, வல்லுநர்களுக்கும் இன்னும் தேவை உள்ளது. அவர்கள் இந்தக் கருவிகளைத் தங்களுக்கான உதவியாளராகப் பயன்படுத்திக் கொண்டு இன்னும் செயல்திறன் மிக்கவர்களாக ஆகிறார்கள்.

எடுத்துக்காட்டாக, ஒரு நாளைக்கு இரண்டு அறுவை சிகிச்சைகளைச் செய்துகொண்டிருந்த ஒரு மருத்துவர் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைத் தன் உதவியாளராகப் பயன்படுத்திக் கொண்டால் ஒரு மணி நேரத்தில் 4 அறுவை சிகிச்சைகளைச் செய்துவிடலாம்.

ஏனெனில், இப்போது இவர் செய்து கொண்டிருக்கிற பல வேலைகளை அந்த உதவியாளர் இன்னும் விரைவாகச் செய்துவிடும். அவற்றை இவர் மேற்பார்வையிடுவார். ஏதாவது தவறு செய்தால் திருத்துவார், தான் மட்டும் செய்ய வேண்டிய தன்னால் மட்டும் செய்யக்கூடிய வேலைகளைத் தானே செய்துவிட்டு அடுத்த அறுவை சிகிச்சையை நோக்கிச் சென்று விடுவார்.

**வேலைவாய்ப்பு பெருகும்:** இங்கு ஒரு மனிதருடைய (மருத்துவர்), அவர் சார்ந்திருக்கும் நிறுவனத்துடைய (மருத்துவமனை) செயல்திறனைச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் மேம்படுத்துகிறது. அதனால், இப்படி யாரெல்லாம் தொழில்நுட்பத்தை உதவியாளராகப் பயன்படுத்திக் கொள்கிறார்களோ, அவர்களுடைய வேலைவாய்ப்பு பெருகும், குறையாது.

**ஆக, நாம் கேட்க வேண்டிய கேள்விகள்:** செயற்கை நுண்ணறிவை என்னுடைய வேலையை இன்னும் சிறப்பாகச் செய்யப் பயன்படுத்திக் கொள்வது எப்படி? அதை ஒரு கருவியாகப் பயன்படுத்தி நான் இன்னும் நன்றாகப் பணிபுரிவது எப்படி? என்னுடைய துறையில் இது தொடர்பாக என்னவெல்லாம் மாற்றங்கள், முன்னேற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன? அவற்றை நான் கற்றுக்கொள்ள என்ன வழி?

இந்தக் கேள்விகள் எல்லா வேலைகளைச் செய்கிறவர்களுக்கும் பொருந்தும். சிலருக்கு இவற்றின் பதில் சற்று கசப்பானதாகவும் இருக்கலாம். அதாவது, தான் இப்போது பார்த்துக்கொண்டிருக்கிற வேலை சிந்திக்கத் தெரிந்த ஓர் இயந்திரத்தால் செய்யக்கூடியதுதான் என்று அவர்கள் உணரலாம். அப்படிப்பட்ட வேலைகளுக்குத்தான் இந்தத் தொழில்நுட்பத்தால் உடனடி ஆபத்து இருக்கிறது.

**தொடர்ந்து கற்க வேண்டும்:** அப்போது, அவர்கள் உடனடியாகத் தங்களுடைய திறன் மேம்பாட்டைப் பற்றி யோசிக்கத் தொடங்க வேண்டும். அதாவது, தங்களுடைய அனுபவம், திறமைகளைப் படிக்கல்லாகப் பயன்படுத்திக் கொண்டு அதே துறையில், அல்லது அது சார்ந்த இன்னொரு துறையில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை உதவியாளராகக் கொண்டு செயற்படும்விதமான ஒரு வேலைக்கு மாறுவதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும், அதற்காகப் படிக்கவும் பயிற்சி பெறவும் தொடங்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, அந்த மளிகைக்கடைப் பணியாளரால் ட்ரோனைப் போல் பறக்க முடியாதுதான், ஆனால், அதை இயக்கக் கற்றுக் கொள்ளலாம். அதன் பிறகு அவர் வெயிலில் அலைந்து திரியாமல், நான்கைந்து ட்ரோன்களை வைத்துக்கொண்டு ஊர் முழுவதும் அரிசி, பருப்பு டெலிவரி செய்யலாம்.

இதைக் கேட்பதற்கு மலைப்பாக இருக்கலாம். ஆனால், இன்றைய இணையத்தில் கிட்டத்தட்ட எல்லாப் புதிய தொழில்நுட்பங்களும் இலவசமாகவே படிக்கக் கிடைக்கின்றன.

கற்க வேண்டும் என்ற விருப்பம் நமக்கு இருந்துவிட்டால் போதும். இயந்திரங்கள் தொடர்ந்து கற்கின்ற உலகத்தில் நாம் கற்கத் தயங்கினால் எப்படி? தொழில்நுட்ப முன்னேற்றத்தை யாராலும் தடுக்க முடியாது.

எனினும், பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற விதிப்படி தன்னுடைய திறமைகளை அவ்வப்போது புதுப்பித்துக் கொண்டிருக்கிற மனிதனின் இயற்கை நுண்ணறிவு அதைப் பயன்படுத்திக் கொண்டு, அதோடு சேர்ந்து வளரும் என்று நம்புவோம்.

**என்.சொக்கன்**

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1762 – கண்டி மன்னருடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனம் ஜோன் பைபசு என்பவரை இலங்கைக்கு அனுப்பியது.
- 1944 – மகாத்மா காந்தி சிறையிலிருந்து விடுதலையானார்.
- 1950 – தாய்லாந்தின் மன்னராக பூமிபால் அதுல்யாதெச் 'ஒன்பதாவது ராமா' என்ற பெயரில் முடி சூடினார்.
- 1961 – மேர்க்குரி திட்டம்: அலன் ஷெப்பர்ட் விண்வெளிக்குச் சென்ற இரண்டாவது மனிதரும் முதலாவது அமெரிக்கரும் ஆனார்.
- 1976 – புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெயருடனிருந்த விடுதலை இயக்கத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் என்று பெயர் மாற்றப்பட்டது.

# குளிக்கச்சென்று நீரில் அடித்துச்செல்லப்பட்ட யுவதியை காப்பாற்றச்சென்றவர் நீரில் மூழ்கி பலி

## காணாமல்போன யுவதியை தேடும் பணிகள் தீவிரம்





(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - கங்கேவாடி பகுதியில் உள்ள கலாஓயா ஆற்றில் குளிக்கச் சென்ற நிலையில், நீரில் அடித்துச் செல்லப்பட்ட தனது மகளை காப்பாற்றுவதற்காக ஆற்றில் குதித்த தந்தை நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மேலும், அண்மையில் திருமணமான மற்றுமொரு யுவதியொருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமல் போயுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (03) இடம்பெற்றுள்ளது.

புத்தளம் - கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த முஹம்மட் பரீன் (வயது 42) எனும் குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், கற்பிட்டி வன்னிமுந்தல், முஹம்மதியா புரம் பகுதியைச் சேர்ந்த பாத்திமா அப்சானா (வயது 22) எனும் திருமணமாகி 20 நாட்களேயான யுவதியே காணாமல் போயுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கலாஓயா ஆற்றின் நீர்மட்டம் ஒரே தடவையில் அதிகரித்துள்ளமையே இந்த அனர்த்தத்துக்கு காரணமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

உயிரிழந்த நபர் தமது குடும்பம் மற்றும் உறவினர்கள் என 08 பேருடன் இயந்திரப் படகு ஒன்றில் கற்பிட்டியிலிருந்து வன்னாத்தவில்லு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கங்கேவாடி பகுதியிலுள்ள ஆற்றுக்கு குளிப்பதற்காகச் சென்றுள்ளனர்.

இதன்போது, உயிரிழந்த இளம் குடும்பஸ்தரின் மகளும் அவரின் உறவினர் முறையைச் சேர்ந்த 22 வயதுடைய அண்மையில் திருமணமான யுவதியும் ஆற்றுக்குள் நீராடிக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, நீராடிக்கொண்டிருந்த குறித்த இளம் யுவதி நீரில் அடித்துச் செல்வதாக அங்கிருந்தவர்கள் கூக்குரலிட அதனை அவதானித்த தந்தை உடனடியாக ஆற்றுக்குள் பாய்ந்து நீரில் இழுத்துச் செல்லப்பட்ட தனது மகளை பாதுகாப்பான முறையில் மீட்டுள்ளார்.

இதனையடுத்து, தனது மகளோடு கூடவே இருந்து நீராடிக் கொண்டிருந்த அண்மையில் திருமணமான தனது உறவுமுறை யுவதியும் காணாமல் போயுள்ளமையை அவதானித்த அந்த குடும்பஸ்தர் மீண்டும் ஆற்றுக்குள் பாய்ந்த நிலையில், அவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து, அங்கிருந்தவர்கள் நீரில் மூழ்கிய குடும்பஸ்தரை மீட்டு, உடனடியாக வன்னாத்தவில்லு பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவம் பற்றி வன்னாத்தவில்லு பொலிஸாருக்கும் புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரிக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம், சம்பவ இடத்தில் மரண விசாரணையை முன்னெடுத்ததுடன், வன்னாத்தவில்லு பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சடலத்தை பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து, உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர், நீரில் மூழ்கியமையினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கி உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக திடீர் மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

வார விடுமுறையை கழிப்பதற்காக நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரோடு இவ்வாறு ஆறுகள், குளங்களுக்கு குளிப்பதற்காக செல்வோர் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும் விசேடமாக சிறுவர்களை ஆறுகள், குளங்களுக்குள் குளிப்பதற்கு அனுமதிப்பதை குறைத்துக் கொள்ளுமாறும் இது விடயத்தில் மக்கள் தெளிவுபெற வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.

மேலும், நீரில் அடித்துச் செல்லப்பட்டு, காணாமல் போயுள்ள யுவதியை தேடும் பணிகள் மிகவும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதா கவும் கடற்படையினர், பொலிஸாருடன் இணைந்து நூற்றுக்கணக்கான இயந்திரப் படகுகளில் மீனவர்கள், பொதுமக்கள் எனப் பெரும் எண்ணிக்கையிலானோர் தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் வன்னாத்தவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# மலையக பிரதான ரயில் பாதையில் ஒன்றான எல்ல ஒன்பது வளைவு பாலத்தில் நீர்க் கசிவு

மலையக பிரதான ரயில் பாதையில் ஒன்றான, 'Bridge in the Sky' என்று அழைக்கப்படும் எல்ல பகுதியில் உள்ள ஒன்பது வளைவு பாலத்தில் நீர்க் கசிவு ஏற்பட்டுள்ளதாக முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

கனமழை பெய்யும் காலங்களில் இந்த கசிவு தெரியும் என்று கூறப்படுகிறது.



எல்ல மற்றும் தெமோதர ரயில் நிலையங்களுக்கு இடையில் 1921ஆம் ஆண்டு கட்டப்பட்ட எல்ல ஒன்பது வளைவு பாலம், உள்ளூர்வாசிகள் மற்றும் வெளிநாட்டினருக்கு பிரபலமான சுற்றுலாத் தலமாகும்.

பாலத்தில் தன்னார்வ காவலராக பணியாற்றிவரும் டபிள்யூ.எம். சுமனசேன, சமீபத்தில் கனமழையின்போது இந்த கசிவு காணப்பட்டதாகத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து ரயில்வே துறைக்கு இன்னும் முறையான அறிவிப்பு எதுவும் கிடைக்கவில்லை என்று ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக ஜெயசுந்தர கூறினார்.

### விசாரணைகள் ஆரம்பம்

இருப்பினும், இந்தப் பிரச்சினையை உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாலத்தைச் சுற்றியுள்ள அருகிலுள்ள கட்டுமான நடவடிக்கைகளை ஆராய்ந்து, அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களுக்கு பொறுப்பான அனைத்து நபர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக ஜெயசுந்தர குறிப்பிட்டார்.

# தேர்தல் பிரசார அலுவலகத்தை அகற்றச்சென்ற பொலிஸ் அதிகாரிகள் குழு மீது தாக்குதல்

(எம்.ஏ.அமீனுல்லா)

தேர்தல் பிரசாரத்துக்கான காலக்கெடு முடிந்த பிறகு, மெனிக்ஹின்ன, லாலிவலதென்ன பகுதியில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளரின் பிரசார அலுவலகத்தை அகற்றச் சென்ற மெனிக்ஹின்ன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட அதிகாரிகள் குழுவை கொலை செய்வதாக மிரட்டி, கத்தியால் தாக்க முயன்றதாக கூறப்படும் ஒருவரை பொலிஸார் நேற்று (04) கைது செய்தனர்.

சந்தேகநபர் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளரின் ஆதரவாளர் என்றும் கட்சி அலுவலகம் அவருக்குச் சொந்தமான கட்டிடத்தில் அமைந்துள்ளது என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தேர்தல் பிரசாரத்துக்கான காலக்கெடு 3ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முடிவடைந்த பிறகும், குறித்த ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர்

### சந்தேகநபர் ஒருவர் கைது

பிரசார அலுவலகம் அகற்றப்படவில்லை. என பொலிஸாருக்கு கிடைத்துள்ள இரகசியத் தகவலின் அடிப்படையில் அதை அகற்றச் சென்றபோது இவ்வாறு நடந்துகொண்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வெறித்தனமாக நடந்துகொண்ட கட்டடத்தின் உரிமையாளரை, பொலிஸ் அதிகாரிகள் மிகுந்த முயற்சியுடன் கைதுசெய்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுதத் மாசிங்கவின் அறிவுறுத்தலின் பேரில், மெனிக்ஹின்ன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, எம்.டி.சந்திரபால உள்ளிட்ட குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்ற குற்றவாளிகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை

நாட்டில் குற்றங்களை செய்துவிட்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்ற பலரை மீண்டும் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் அறிவித்துள்ளது.

டுபாய், இந்தியா மற்றும் கனடா போன்ற நாடுகளில் தற்போது வசிக்கும் இதுபோன்ற 20க்கும் மேற்பட்ட குற்றவாளிகளை மீண்டும் அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (04) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

# மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்த கணவன்

## பொலன்னறுவையில் சம்பவம்

பொலன்னறுவை வடக்கு பகுதியில் நபர் ஒருவர் தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (03) இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குடும்பத் தகராறு காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தங்காலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

49 வயதுடைய பெண்ணொருவரே குறித்த சம்பவத்தில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், தங்காலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வரின் மறைவு முழு நாட்டுக்கும் பேரிழப்பாகும்

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் இரங்கல்







இன நல்லிணக்கத்துக்காக நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆற்றிய ஆன்மீக சேவை அளப்பரியது. அவரின் மறைவு முழு நாட்டுக்கும் இழப்பாகும் - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில்,

நல்லை ஆதீன குரு முதல்வர் இறையடி சேர்ந்துவிட்டார் என்ற செய்தி வேதனையளிக்கின்றது.

ஆன்மிகப் பணியென்பது புனிதமானது. அப்பணியை மிகவும் சிறப்பாக முன்னெடுத்தவர்தான் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள். ஆன்மிக சேவைக்கு அவர் ஒருபோதும் மாசு ஏற்படுத்தவில்லை. அதன் புனிதத்தன்மையை கடைசிவரை காத்தார்.

நெருக்கடியான நேரங்களில் எல்லா நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் ஆசிவேண்டி பூஜைகளை நடத்தியுள்ளார். நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையிலும் மக்களுக்காக பல சேவைகளை புரிந்துள்ளார். இப்படியான மகான்களின் மறைவு தாங்கிக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

பூரணமடைந்த சுவாமிகளின் ஆத்மா இறையடி சேர இறைவனை பிரார்த்திக்கின்றேன்." - என்றுள்ளது.

# உள்ளூராட்சித் தேர்தல் விதிமீறல்கள் அதிகரிப்பு இதுவரை 4,339 முறைப்பாடுகள் பதிவு

உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.


அதனடிப்படையில், இதுவரை 4,339 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 31 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 189 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த 03 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளது எனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளே இதுவரை அதிகமாக கிடைக்கப்பெற்றுள்ளன. அது 4,024ஆக பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில், இதுவரையான முறைப்பாடுகளில் 3,640 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 699 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் தேர்தல் விதிமீறல்கள் குறித்து தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 414 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 3,925 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.



தேர்தல் ஆணைக்குழு
Election Commission
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இலக்கம் : LAE/2025/90

2025.05.04

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06
தேர்தல் முறைப்பாட்டு சாரம்சக் குறிப்பு

| முறைப்பாடு கிடைத்தல் | வன்முறைச் சம்பவங்கள் | சட்டத்தினை மீறுதல் | வேறு | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 02 | 03 | 07 | 12 |
| மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 01 | 161 | 15 | 177 |
| நாளாந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 03 | 164 | 22 | 189 |

| முறைப்பாடு கிடைத்தல் | வன்முறைச் சம்பவங்கள் | சட்டத்தினை மீறுதல் | வேறு | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 03 | 358 | 53 | 414 |
| மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 28 | 3666 | 231 | 3925 |
| மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 31 | 4024 | 284 | 4339 |

| விபரம் | முறைப்பாடு கிடைத்தல் | முறைப்பாடுகளை தீர்த்தல் | நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 414 | 319 | 95 |
| மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 3925 | 3321 | 604 |
| மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 4339 | 3640 | 699 |

# உள்ளூராட்சித் தேர்தல்; பாடசாலைகளுக்கு விடுமுறை

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் காரணமாக நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் இன்று (05) மற்றும் நாளை(06) மூடப்படவுள்ளது.

அதன்படி, பாடசாலைகள் புதன்கிழமை (07) மீளத் திறக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொதுமக்களுக்கு கடவுச்சீட்டு வழங்குதல் மற்றும் ஒரு நாள், பொது சேவைகள் வழங்குதல் மட்டுப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

குறித்த சேவைகள் மே 05, 06 மற்றும் 07ஆம் திகதிகளில் மட்டுப்படுத்தப்படும். ஒரு நாள் சேவைக்காக இயக்கப்பட்ட 24 மணி நேர சேவை குறித்த நாட்களில் இயங்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மீட்டியாகொட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

## காயமடைந்த மற்றுமொருவர் ஆபத்தான நிலையில்



மீட்டியாகொடவில் நேற்று முன்தினம் (03) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், காயமடைந்த மற்றொருவர் ஆபத்தான நிலையில் உள்ளார்.

மீட்டியாகொட, தம்பஹிட்டியவில் அமைந்துள்ள ஒரு உணவகத்துக்குள் துப்பாக்கிச் சூடு நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு தாக்குதல்தாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந்தார். காயமடைந்த நபர் பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து மீட்டியாகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேகநபர்கள் இருவர் கைது

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் (03) பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிஹேன வத்த மற்றும் இராஜாங்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யாய 12 கிராமப் பகுதியிலும் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 326 லீற்றர் 250 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானம் மற்றும் 2,345 லீற்றர் கோடா ஆகியன கைப்பற்றப்பட்டன. நீர்கொழும்பு, திம்பிரிகஸ்கடுவவையைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரும் இராஜாங்கனை, யாய 12 கிராமப் பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அவிசாவளை - கொழும்பு அதிவேக வீதியில் மோட்டார்சைக்கிள் விபத்து: ஒருவர் உயிரிழப்பு

பாதுக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அவிசாவளை - கொழும்பு அதிவேக வீதியில் கலகெதர பகுதியிலிருந்து இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த வாகன விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை (04) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கலகெதர - பாதுக்க பகுதியைச் சேர்ந்த 20 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவிசாவளையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளில் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த வாகன விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வியட்நாம் சென்ற ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு




வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் (Luong Cuong) இன் அழைப்பின் பேரில் வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் (03) நாட்டிலிருந்து புறப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நேற்று (04) முற்பகல் வியட்நாமின் நோய் பாய் (Noi Bai International Airport) சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

அங்கு, ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர், வியட்நாம் கம்யூனிஸக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் வெளியுறவுத் துறை பிரதி அமைச்சருமான நுயென் மான் குவோங் (Nguyen Manh Cuong) உள்ளிட்ட அரச பிரதிநிதிகளால் அமோகமாக வரவேற்கப்பட்டனர்.

இந்த வரவேற்பு நிகழ்வில் இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் டிரின் தி டேம் (Trinh Thi Tam),வியட்நாமுக்கான இலங்கைத் தூதுவர் போசித பெரேரா மற்றும் இலங்கைத் தூதரகத்தின் பிரதிநிதிகள் குழுவும் கலந்துகொண்டனர்.

இன்று (05) பிற்பகல், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ஹனோயில் உள்ள வியட்நாம் கம்யூனிஸ கட்சியின் (CPV) மத்திய குழு தலைமையகத்தில் கம்யூனிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் டோ லாமை (T Lm) சந்திக்கவுள்ளார்.

மேலும், ஜனாதிபதி இன்று வியட்நாம் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களிலும் ஈடுபடவுள்ளார்.

நாளை 06ஆம் திகதி ஹோ சி மிங் நகரில் ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் வெசாக் தினக் கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, சிறப்புரை நிகழ்த்துவார்.

இந்த விஜயத்தின்போது இரு தரப்பினருக்குமிடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் கைச்சாத்திடவும் வர்த்தக சமூகத்துடன் கலந்துரையாடல்களை நடத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அரச விஜயத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் வெளிநாட்டலுவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் குழுவும் இணைந்துகொள்கின்றது.

# பகிடிவதைக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் தாக்கப்பட்ட ஜயவர்தனபுர பல்கலை மாணவன்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் மூன்றாம் ஆண்டு மாணவர் ஒருவர் பகிடிவதைக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் அதே ஆண்டு மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்கள் குழுவால் தாக்கப்பட்டுள்ளார். தாக்குதலுக்குள்ளான மாணவர் வெலிகம பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் ஒருவர் பகிடிவதை காரணமாக ஏற்பட்ட மன அழுத்தத்தால் உயிரிழந்த சம்பவம் நாட்டில் இன்னும் பேசுபொருளாக இருக்கும் நிலையில், இந்தத் தாக்குதல் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

தாக்கப்பட்ட மாணவர், பல்கலைக்கழகத்தில் பகிடிவதைக்கெதிராக குரல்கொடுத்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அவர் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர் புனைப்பெயர் இல்லாமல் சுதந்திரமாக நடமாடியதும் இந்தத் தாக்குதலுக்கு காரணமாக அமைந்ததாகக் கூறப்படுகிறது.

சுமார் 20 மாணவர்கள் அவரது விடுதிக்குச் சென்று தலைக்கவசத்தால் தலையிலும் முதுகுப் பகுதியிலும் மனிதாபிமானமற்ற வகையில் தாக்கியதாக அந்த மாணவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் ஆய்வரங்கு - குறள் மறுவாசிப்பு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆய்வரங்கு 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மதியம் 1.00 மணிவரை கொழும்புத் தமிழ்ச் சங்க புலமைக் குழுத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் விநோதன் மண்டபத்தில் 'குறள் மறுவாசிப்பு' எனும் தலைப்பை ஆய்வரங்கு கருப்பொருளாகக் கொண்டு நடைபெறவுள்ளது.

'ஈழத்துத் தமிழ்ச் சூழலில் திருக்குறள் : சமூகம் - கருத்து நிலை - பண்பாடு' - முனைவர் தி.செல்வ மனோகரன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), 'திருக்குறள் எனும் தமிழ் அடையாளம்' - தெ.மதுசூதனன் (சமூக ஆய்வாளர்), 'சட்டமும் குறளும்' - சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா (தலைவர் - கொழும்புத் தமிழ்ச் சங்கம்) ஆகியோரின் ஆய்வுரைகள் இடம்பெறும்.

# இலஞ்ச ஊழலைத் தடுக்கும் செயற்றிட்டம் சப்ரகமுவ மாகாணத்திலும் ஆரம்பம்

## ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தெரிவிப்பு




(இரத்தினபுரி நிருபர்)

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கான செயற்றிட்டத்துக்கேற்ப அரச நிறுவனங்களில் செயல்படுத்தப்படும் உள் விவகார பிரிவு, தற்போது சப்ரகமுவ மாகாண சபையிலும் நிறுவப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தெரிவித்தார்.

இரத்தினபுரியில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அரச ஊழியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர்,

2023ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டம் நடைமுறையில் உள்ளது. இலஞ்சம் மற்றும் ஊழல் இல்லாத பொது சேவையை நிறுவுவதே இதன் நோக்கமாகும். இலஞ்சம் மற்றும் ஊழல் நிறைந்த ஒரு நாட்டை சிறந்த நாடாக மாற்ற முடியாது.

நாட்டில் இலஞ்சம், ஊழல் மற்றும் முறைகேடுகள் அரசியல் அதிகாரத்தின் அடிப்படையில் செயல்படுவதில்லை. அனைத்து அரசு ஊழியர்களும் இலஞ்சம், ஊழல் மற்றும் முறைகேடுகளை எதிர்க்க வேண்டும்.

ஜனாதிபதியின் செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில், நாடு முழுவதும் உள்ள அரசு நிறுவனங்களில் புகார்களைப் பெறுவதற்கும், இலஞ்ச ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரணை செய்வதற்கும் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளது என்று ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண சபையின் பிரதி பிரதான செயலாளர் லக்மாலி உதயகுமாரியின் பொறுப்பின் கீழ் சப்ரகமுவ மாகாணத்தில் உள் விவகாரப் பிரிவு, நிறுவப்பட்டுள்ளது. இதில் சப்ரகமுவ மாகாண சபையின் அனைத்து அமைச்சு செயலாளர்களும் அடங்குவர்.

பொது அதிகாரிகளின் இலஞ்சம், ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்த புகார்களை எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ அதே அமைப்புக்கு தெரிவிக்கலாம்.

சப்ரகமுவ மக்கள் WHATSAPP, E-MAIL மற்றும் பலவற்றை உள்ளடக்கிய ஆன்லைன் வசதிகள் மூலம் விரைவாக புகார்களைச் சமர்ப்பிக்கும் வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் ஈ.கே.ஏ.சுனிதா, மாகாண பிரதி பிரதான செயலாளர் (பணியாளர் மற்றும் பயிற்சி) சுசிலா ராஜபக்ஷ மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.




தென்னிந்திய நடிகர் அஜித்குமாரின் பிறந்த நாளை முன்னிட்டு செட்டியார் தெரு ஏ. கே. நற்பணி மன்ற அங்கத்தவர்களால் செட்டியார் தெரு பிள்ளையார் கோவில் அருகில் அன்னதான நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது அஜித்குமாருக்கான பிறந்தநாள் கேக் வெட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் தொடர்ந்து அன்னதான நிகழ்வுடன் நிறைவு பெற்றது.

# மிஹிந்துபுர பகுதியில் ஐஸுடன் ஒருவர் கைது

(அநுராதபுரம் நிருபர்)

ஐஸ் போதைப்பொருட்களுடன் பெண் சந்தேகநபரொருவரை அநுராதபுரம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய அநுராதபுரம் பொலிஸ் பிரிவின் மிஹிந்துபுர பகுதியில் நேற்று முன்தினம் (03) நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரைக் கைதுசெய்துள்ளதுடன், ஐஸ் போதைப்பொருள் 20 கிராமுக்கும் அதிகமானவற்றை அநுராதபுரம் மது ஒழிப்பு பிரிவுப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 24 வயதுடைய யுவதியொருவர் என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலைய மது ஒழிப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தல் விதிமீறல் குறித்து மேலும் ஐந்து வேட்பாளர்கள் கைது

உள்ளூராட்சித் தேர்தலையொட்டி மேலும் ஐந்து வேட்பாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

24 மணி நேரத்தில் (மே 02 காலை 06 மணி முதல் நேற்று முன்தினம்(03) காலை 06 மணிவரை) தேர்தல் விதிமீறல்கள் மற்றும் குற்றச்செயல்களுக்கான முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதே காலப்பகுதியில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து தேர்தல் தொடர்பான 08 குற்றவியல் முறைப்பாடுகள் மற்றும் 27 தேர்தல் விதிமீறல் முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன. இந்த முறைப்பாடுகளுக்கமைய 05 வேட்பாளர்களும் 22 அரசியல் கட்சி ஆதரவாளர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதனூடாக, தற்போதுவரை தேர்தல் தொடர்பாக கைதுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 233 ஆக உயர்ந்துள்ளது. இதில் 43பேர் நேரடியாக வேட்பாளர்கள் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. மேலும், தேர்தல் தொடர்பாக மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 524ஆக அதிகரித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வளர்ச்சிகள், தேர்தல் சூழ்நிலையின் தீவிரத்தையும் சட்டம் - ஒழுங்கு பராமரிப்பின் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகின்றன.

# தற்கொலை செய்துகொண்ட சப்ரகமுவ பல்கலை மாணவனுக்காக 33 சட்டத்தரணிகள் ஆஜர்

## 20 மாணவர்கள் வாக்குமூலம்



(ஏ.ஏ எம்.பாயிஸ்)



தற்கொலை செய்துகொண்ட சப்ரகமுவ பல்கலைக்கழக பொறியியல் தொழில்நுட்ப பீடத்தில் பகிடிவதையால் பாதிக்கப் பட்டு உயிரிழந்த மாண வன் சரித் தில்ஷானின் உரிமைகள் தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு பலாங்கொடை நீதவான் நீதிமன்றம் உட்பட இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பல நீதிமன்றங்களின் 33 சட்டத்தரணிகள் தயாராகவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

தனது மன அழுத்தமே தற்கொலைக்கு காரணம் என இம்மாணவன் தற்கொலை செய்துகொள்ள முன் எழுதியிருந்த கடிதத்துக்கிணங்க இவரது மரணத்துக்கு காரணம் இவர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மூர்க்கத்தனமான பகிடிவதையே என பலாங்கொடை மனலவெவ பொலிஸ் நிலையத்தில் இவரைப் போன்று பகிடிவதைக்குள்ளான 20 மாணவர்கள் பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

கடந்த 29ஆம் திகதி பகிடிவதைக்குள்ளான இம்மாணவனின் தற்கொலை தொடர்பில் உயர்கல்வி அமைச்சு, பொலிஸ் குற்றப்புலனாய்வுத் துறை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழக நிர்வாகம், சுயாதீன சட்டத்தரணிகள் குழு என பல தரப்பினரின் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட ஏனைய 20 மாணவர்கள், மாணவனின் குடும்பத்தினர், ஏனைய தரப்புகளின் வாக்குமூலங்களின் பின் தாம் களமிறங்கப்போவதாக சட்டத்தரணிகள் அமைப்பின் சார்பில் ராஜித பலிஹவடன கல்ஹார விஜேசிங்க ஆகியோர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் சிறப்பு ஆய்வு விஜயம்




மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் மக்களுக்கு மூன்றாம் நிலை சுகாதார சேவைகளை வழங்கும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை, முழுமையான பௌதீக மற்றும் மனித வளங்களைக் கொண்ட வைத்தியசாலையாக மாற்றப்படுமென்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்ற சிறப்பு ஆய்வுக்குப் பின்னர் நடைபெற்ற கலந்துரையாடலின்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

வடமாகாண சபையின் ஒப்புதலுடன் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை மத்திய அரசாங்கத்தின் நெறிப்படுத்தலில் மன்னார் மாவட்டத்தில் வாழும் மக்களுக்கு உகந்த சுகாதார சேவைகளை வழங்குவதற்காக இந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், அரசு ரூ.1000 நிதி ஒதுக்கீடு செய்யும் என்றும் அவர் கூறினார். வைத்தியசாலையின் பௌதீக வளங்களை மேம்படுத்துவதற்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடுகளில் 250 மில்லியன் இந்த ஆண்டிலேயே வழங்கப்படும். மீதமுள்ள ரூ.250 மில்லியன் அடுத்த ஆண்டு வழங்கப்படும்.

வைத்தியசாலையில் பணிபுரியும் சிறப்பு வைத்தியர்கள் முதல் கீழ்மட்ட ஊழியர்கள் வரை சுகாதாரப் பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பது தனக்குத் தெரியுமென அமைச்சர் தெரிவித்தார்.

பயிற்சியை முடித்து வரும் ஊழியர்கள், பணியமர்த்தப்படவுள்ள ஊழியர்கள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சியை முடித்து நாடு திரும்பும் வைத்தியர்கள் ஆகியோரை இந்த வைத்தியசாலையில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஆய்வு சுற்றுப்பயணத்தின்போது, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ, மன்னார் மாவட்ட பொதுவைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, வைத்தியசாலை வளாகம், வார்டுகள், மருந்தகம், அவசர சிகிச்சைப் பிரிவு, சமையலறை, ஹீமோடையாலிசிஸ் பிரிவு, ஆய்வகம், இரத்த வங்கி, மருத்துவ குடியிருப்புகள், சுகாதார ஊழியர்கள் குடியிருப்புகள் மற்றும் தங்குமிடங்கள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளையும் ஆய்வுசெய்தார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் ரூ.100 கோடி நிதிப் பங்களிப்புடன் கட்டப்படவுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் கட்டுமானத்துக்காக உத்தேச இடத்தையும் அமைச்சர் ஆய்வு செய்தார்.

வைத்தியசாலை மேலாண்மை அதிகாரசபை, சிறப்பு வைத்தியர்கள், வைத்தியர்கள், செவிலியர்கள் மற்றும் பிற வைத்தியசாலை ஊழியர்களுடன் நடைபெற்ற சிறப்புக் கலந்துரையாடலின் போது, சுகாதார ஊழியர்கள் தங்கள் சேவைகளைச் செய்வதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து அமைச்சர் சிறப்புக் கவனம் செலுத்தி, அந்தப் பிரச்சினைகளுக்கு குறுகிய கால, நடுத்தர மற்றும் நீண்டகாலத் தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுத்தார்.

அதேபோல், மன்னார் மாவட்ட மக்களைப் பாதிக்கும் தொற்று மற்றும் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துதல், குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் தற்போதைய ஊட்டச்சத்து நிலை மற்றும் எதிர்கால ஊட்டச்சத்து திட்டங்களை செயற்படுத்துதல், சுகாதார மருத்துவ அதிகாரிகள் அலுவலகங்களுக்கு திரிபோஷா வழங்குதல், கள அலுவலர்களின் போக்குவரத்துச் சிக்கல்கள் மற்றும் நடைமுறை சிக்கல்கள் குறித்து வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரிகள், தலைமை வைத்திய அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு அப்போது எழுந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ நடவடிக்கை எடுத்தார்.

நோயாளி பராமரிப்பு சேவைகளை முறையாகவும் திறமையாகவும் பராமரிக்கத் தேவையான CT ஸ்கேன் இயந்திரத்தை வழங்க சுகாதார அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அதற்கான கொள்முதல் செயல்முறை மற்றும் நடைமுறைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் இந்தக் கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வலுவான நோயாளி பராமரிப்பு சேவைகளைப் பராமரிக்கும் நோக்கில் பெறுமதிமிக்க அதிநவீன மருத்துவ உபகரணங்களையும் அமைச்சர் வழங்கினார்.

மத்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் ECHO இயந்திரம், (ECHO Machine), வீடியோ லாரிங்கோஸ்கோப், (Video Laryngoscope), இரட்டை ஒளிக்கதிர் சிகிச்சை, (Double Phototherapy), பிறந்த குழந்தைகளுக்கான CPAP, திரவ வெப்பமாக்கல், Fluid Warmer, குழந்தை வெப்பமாக்கல், Infant Warmer, குழந்தை இன்குபேட்டர், Infant Incubator, பாச்சோ இயந்திரம், Pacho Machine, அறுவை சிகிச்சை லேசர் அமைப்பு, Surgical Laser System, உறைதல் பகுப்பாய்வு Coagulation Analyzer, திசு செயலி, tissue Processor, ரோட்டரி மைக்ரோடோம் Rotary Microtome உட்பட 100 மில்லியன் ரூபா ஆகியன வழங்கப்பட்டன.

# மட்டக்களப்பில் 4,55,520 பேர் வாக்களிக்கத் தகுதி: 274 பேரைத் தெரிவுசெய்வதற்காக 447 வாக்களிப்பு நிலையங்கள்

## உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சுபியான்



(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு இலட்சத்து 55 ஆயிரத்து 520 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இந்நிலையில், 12 சபைகளுக்காக இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இம்முறை 447 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. மேலும் 144 வட்டாரங்களிலிருந்து மேலதிக பட்டியலுடன் சேர்ந்து 274 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளதாக மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியான் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (04) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது,

''மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்புப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன. அத்தோடு, தேர்தல் பணிகளுக்காக இம்முறை 6,000 க்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, 447 வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெறுகின்ற வாக்களிப்புகளை எண்ணுவதற்கு 144 வட்டார நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. மாவட்டத்தில் இம்முறை நான்கு இலட்சத்து 55 ஆயிரத்து 520 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 50க்கும் குறைவான தபால் மூல வாக்குகளை எண்ணுவதற்காக விசேட நிலையங்கள் அமைக்கப்படும். தபால் மூல வாக்கெண்ணும் பணிகளுடன் இணைந்ததாக இறுதித் தேர்தல் முடிவு வட்டாரத் தேர்தல் எண்ணும் நிலையத்திலிருந்து வெளியிடப்படும்''- என்றார்.



காரைதீவு அருள்மிகு ஸ்ரீ தான்தோன்றி நாககன்னி அம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு வெள்ளிக்கிழமை(02) இடம்பெற்றது. இதனை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை பாற்குட பவனியின்போது பத்தர்கள் வீதி வழியாக பால்குடம் ஏந்தி ஆலயம் நோக்கிச்சென்றனர். (காரைதீவு செய்தியாளர்)

# விபுலானந்த அடிகளாரின் 133 ஆவது ஜனன தினம் கல்லடியில் அனுஷ்டிப்பு



(வெல்லாவெளி செய்தியாளர்)

சுவாமி விபுலானந்த அடிகளாரின் 133 ஆவது ஜனன தின நிகழ்வு சனிக்கிழமை(03) மட்டக்களப்பு கல்லடி-உப்போடை விபுலானந்த மணி மண்டப வளாகத்திலுள்ள அடிகளாரின் சமாதியில் இடம்பெற்றது.

இராமகிருஷ்ண மிஷன் துறவியும் முத்தமிழ் வித்தகரும் சிவானந்தா வித்தியாலய ஸ்தாபகருமான சுவாமி விபுலானந்தரின் 133ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கல்லடி-உப்போடை விபுலானந்த மணி மண்டபத்திலுள்ள அடிகளாரின் சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு இராமகிருஷ்ண மிஷன் பொது மேலாளர் சுவாமி நீலமாதவானந்தாஜி மகராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விபுலானந்த பக்தர்கள், கல்விமான்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், விபுலானந்தர் சபையினர் கலந்துகொண்டு அன்னாரை நினைவுகூர்ந்து அவர் பாடிய பாடல்களைப் பாடியும் சமாதிக்கு மலர்மாலை அணிவித்தும் அவரை வணங்கி வழிபட்டனர்.



**க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவி முஹம்மது நௌபர் பாத்திமா ஸப்றீன் உயர்தர உயிரியல் பிரிவில் அம்பாறை மாவட்டத்தில் முதல் நிலையைப் பெற்று மூன்று பாடங்களிலும் அதி சிறப்பு 'ஏ' தரச் சித்தியைப் பெற்றுள்ளார். இவரின் திறமைப்பய பாராட்டி கல்லூரி முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் வாழ்த்து தெரிவித்தார். குறித்த மாணவி எஸ்.டி.எம். நௌபர் - ஏ.எல்.எம். ரஹீமா ஆகியோரின் புதல்வியாவார். (மாளிகைக்காடு செய்தியாளர்)**

# பாத்திமா பாலிகாவில் முதலுதவிப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்



(மீராவோடை செய்தியாளர்)

ஓட்டமாவடி பாத்திமா பாலிகா வித்தியாலயத்தில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (02) இடம்பெற்றது.

சென் ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் முதலுதவி பயிற்சி பெற்ற மாணவிகளுக்கே சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் ஏ.எல்.எம்.அஸ்ஹர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.ஜவாத் கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.எம்.தாஹிர், மட்டக்களப்பு மத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.அபுல்ஹஸன், சென். ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட ஆணையாளரும் தேசிய பயிற்றுவிப்பாளரும் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலக சிறுவர் விளையாட்டு இணைப்பாளருமான எஸ்.எல்.எச்.எம்.இனாமுல்லாஹ், வாழைச்சேனை பொலிஸ் நிலைய சிறுவர், மகளிர் விவகார பொலிஸ் பொறுப்பதிகாரி திருமதி ஐ.பி.நிலாந்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# காத்தான்குடி நகர சபையின் SMART CITY சேவை அறிமுகம்



(காத்தான்குடி செய்தியாளர்)

காத்தான்குடி நகர சபையால் வடிவமைக்கப்பட்ட SMART CITY திட்ட அறிமுகமும் மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வும் வெள்ளிக்கிழமை (02) நகரசபை காரியாலயத்தில் நடைபெற்றன.

நகர சபைச் செயலாளர் திருமதி ரிப்கா சபீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இஸட்.ஏ.எம்.பைஸல், உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பார்த்திபன், காத்தான்குடி பிரதேச செயலாளர் திருமதி நிஹாரா மவ்ஜூத் மற்றும் மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

SMART CITY செயலியை காத்தான்குடி நகர சபைச் செயலாளர் திருமதி ரிப்கா சபீன் அறிமுகப்படுத்தினார். அவ் அறிமுகத்தின் போது உரையாற்றிய அவர் SMART CITY செயலியூடாக காத்தான்குடி நகர சபையின் நிர்வாக சேவையை பொதுமக்கள் இலகுவாகப் பயன்படுத்திக்கொள்வதுடன் கட்டணங்களை இலகுவாகச் செலுத்தும் வசதிகள், முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு செல்லுதல் போன்றவற்றை துரிதமாக மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

# பல்கலைக்கு தெரிவுசெய்யப்பட்ட ஜாயா வித்தியாலய மாணவிகள் கௌரவிப்பு



(சீனக்குடா செய்தியாளர்)

கிண்ணியா ரீ.பி.ஜாயா மகளிர் மகா வித்தியாலயத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு வெள்ளிக்கிழமை (02) நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எஸ்.ரீ.நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அண்மையில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுப்படி பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட மூன்று மாணவிகளும் அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

ஹபீபுல்லா பாத்திமா ரிஸ்லா, நியாஸ் பாத்திமா நிஸ்பா மற்றும் சலீம் சல்மா ஆகிய மாணவிகளே கௌரவிக்கப்பட்டனர்.

இந்த மாணவிகளுக்கு கற்பித்த ஆசிரியர்கள், அவர்களின் இந்தச் சாதனைக்கு பல்வேறு வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் புரிந்த ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் உட்பட அனைவருக்கும் அதிபர் தனது நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்தார்.

# தென்கிழக்கு பல்கலையின் 17ஆவது ஆண்டு பொது பட்டமளிப்பு விழா





(மாளிகைக்காடு செய்தியாளர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது ஆண்டு பொது பட்டமளிப்பு விழா சனிக்கிழமை (03) பல்கலைக்கழகத்தின் பிரதான அரங்கில் ஆரம்பமானது.

ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் பதில் உபவேந்தர் யூ.எல்.மஜீத் தலைமையில் சனி, ஞாயிறு இரு தினங்களாக நடைபெறும் இப்பட்டமளிப்பு விழாவில் ஆறு அமர்வுகளில் 2077 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனர்.

சனிக்கிழமை முதலாம் நாள் முதல் அமர்வில் இலங்கை உயர்நீதிமன்ற நீதிபதி யசந்த கொடகொட பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இரண்டாம் அமர்வில் களனி பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறை பேராசிரியர் கலாநிதி சீதா.பி. பண்டாரவும் மூன்றாவது அமர்வில் இலங்கைக்கான சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானியும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

முதல் நாளில் பிரயோக விஞ்ஞான பீடத்தில் 172 மாணவர்களும் பொறியியல் பீடத்திலிருந்து 82 மாணவர்களும் தொழில்நுட்பவியல் பீடத்திலிருந்து 102 மாணவர்களும் கலை, கலாசார பீடத்திலிருந்து 314 மாணவர்களும் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்திலிருந்து 342 மாணவர்களும் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இரண்டாம் நாள் முதல் அமர்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் துணைத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கே.எல்.வசந்த குமாரவும் இரண்டாம் அமர்வில் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ துறையின் பேராசிரியர் கலாநிதி மனோஜ் சமரதுங்கவும் மூன்றாவது அமர்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் ரீ.வேல்நம்பியும் கலந்துகொண்டனர்.

இதன்போது முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடத்திலிருந்து 378 மாணவர்களும் வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள் (FAC & FMC) 687 மாணவர்களுமாக 2,077 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனர் என பதில் பதிவாளர் எம்.ஐ.நௌபர் தெரிவித்தார்.

# மின்னும் தாரகைகள் கௌரவிப்பு



(அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)

அட்டாளைச்சேனை அல்- முனிரா பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கடந்த 2004 ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவிகளுக்கான 'மின்னும் தாரகைகள்' கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ரீ.எம். சியாத் தலைமையில் பாடசாலை கூட்ட மண்டபத்தில் வெள்ளிக்கிழமை(02) நடைபெற்றது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றகுமத்துல்லாஹ், பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான எம்.எம்.ஏ.சித்தி பாத்திமா, பி.ஜிஹானா, மஜித், மாதுரி, பிரதி அதிபர் ஏ.ஜே.எம்.றினீஸ், வைத்தியர்களான டாக்டர் கே.எல்.எம். நக்பர், டாக்டர் பறூஸா நக்பர், பொறியியலாளர் என்.எம்.சப்றாஸ் மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இம்முறை இப்பாடசாலையிலிருந்து 38 மாணவிகள் விஞ்ஞானம் மற்றும் கலைத் துறைகளில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிம்பா சித்த ஆயுர்வேத வைத்திய நிலையம் திறந்துவைப்பு

(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

அம்பாறை தம்பட்டை- 2 கடற்கரையை அண்மித்த பிரதேசத்தில் 300க்கும் மேற்பட்ட மூலிகை மரங்களைக் கொண்டதான இலங்கையில் முதலாவதாக உருவாக்கப்பட்ட நிம்பா சித்தாயுர்வேத ஒருங்கிணைந்த வைத்திய நிலையம் நேற்று (04) திறந்துவைக்கப்பட்டது.

வைத்திய நிலையத்தின் ஸ்தாபகர் செ.விக்னேஸ்வரமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தம்பட்டை தபோவனம் ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தா ஜீ மகராஜ் ஆன்மீக அதிதியாகக் கலந்துகொண்டு திறந்து வைத்தார்.

'உணவே மருந்தாகும் மருந்தே உணவாகும்' எனும் அடிப்படையில் கீழை நாட்டு வைத்திய முறைகளாக இருக்கும் சித்த வைத்தியம் ஆயுர்வேத வைத்தியம் யுனானி போன்ற வைத்திய சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

குறிப்பாக, ஒட்டிசியம் எனும் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சையளிப்பதுடன் இந்நோய் வராமல் ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்றெடுப்பது தொடர்பிலும் ஆலோசனைகள், சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



நாட்டு வைத்தியர்கள் என அழைக்கப்படும் சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் நிறைந்து காணப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் அத்துறை மருவி வரும் தற்கால நிலையில் இவ்வைத்திய நிலையம் திறக்கப்பட்டமை இப்பிரதேச மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இதன்மூலம் பெறப்படும் வருமானங்கள் ஜீவாதார சித்த வித்தியா அறக்கட்டளை எனும் அமைப்பினூடாக வருமானம் குறைந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்ட வாக்குப்பெட்டிகள்




(மட்டக்களப்பு செய்தியாளர்)

இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் பிரதான வாக்கெண்ணும் நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டன.

தேர்தல் திணைக்களத்தின் அறிவுறுத் தலுக்கமைவாக ஞாயிற்றுக்கிழமை (04) நண்பகல் மாவட்டத்தில் இடம்பெற வுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்குப்பெட்டிகள் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் மாவட்டத்தின் பிரதான தேர்தல் மத்திய நிலையமான இந்துக் கல்லூரிக்கு எடுத்துவரப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 சபைகளுக்காக இடம்பெற உள்ளூராட்சித் தேர்தலில் இம்முறை 447 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இதேவேளை, பிரதான தேர்தல் மத்திய நிலையமான மட்டக்களப்பு இந்துக் கல்லூரி வளாகத்தில் தேர்தல் கடமைகளுக்கான அத்தியாவசிய சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேர்தல் கடமைகளுக்காக வரும் ஊழியர்களுக்கான குடிநீர் வசதி மற்றும் மின்சார இணைப்புகள், போக்குவரத்து ஏற்பாடுகள் என்பன தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

# 'அமைதியான தேர்தல்' எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு




(ஏறாவூர் செய்தியாளர்)

'அமைதியான தேர்தல்' எனும் தொனிப் பொருளில் (கெபே) நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான அமைப்பு ஏற்பாடு செய்த விழிப்புணர்வு மாநாடு மட்டக்களப்பு - ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை(04) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.பி.எம்.சுபியான், தகவலறியும் ஆணைக்குழுவின் ஆணையாளர் ஜகத் லியனாராச்சி மற்றும் கெபே அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் மனாஸ் மக்கீன் உள்ளிட்ட பலர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

கெபே அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.எல்.எம்.மீராசாஹிப் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் காத்தான்குடி ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய பிரதேசங்களின் தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பாளர்கள் உள்ளிட்ட பலர் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

தேர்தல் தினத்துக்கு முந்திய நாட்கள், தேர்தல் வாக்களிப்பு தினம் மற்றும் வாக்களிப்பு நிறைவுற்று அடுத்து வரும் ஒரு வாரகாலத்துக்கு சுமுகமான நிலை இருப்பதை உறுதிப்படுத்துவது கண்காணிப்பாளர்களது பணியாக இருக்குமென அறிவுறுத்தப்பட்டது.

இதன்போது தேர்தல் வேட்பாளர் களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அதிகாரிகள் பதிலளித்தனர். தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடவுள்ள அதிகாரிகள் மற்றும் தொண்டர்களுக்கு அடையாள அட்டைகள் இந்நிகழ்வில் கையளிக் கப்பட்டன.

# தாழங்குடா மக்கள் குடியிருப்பு பகுதிக்குள் இராட்சத முதலை

## மடக்கிப்பிடித்த மக்கள்



(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு, தாழங்குடா முதலாம் குறிச்சிப் பகுதிக்குள் சனிக்கிழமை (03) அதிகாலை 3.00 மணியளவில் மக்கள் குடியிருப்புப் பகுதி காணிக்குள் திடீரெனப் புகுந்த முதலையைக் கண்டு அச்சமடைந்தவர் பக்கத்து வீட்டு உறவினர்களைக் கூப்பிட்டதைத் தொடர்ந்து பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து நள்ளிரவில் கடும் போராட்டத்துக்கு மத்தியில் முதலையை மடக்கிப் பிடித்துக் கட்டி வைத்துள்ளனர்.

கடந்த ஓரிரு தினங்களாகப் பெய்த மழையால் மட்டக்களப்பில் உள்ள வாவிகள் மற்றும் குளங்களில் நீர் நிறைந்து காணப்படுவதால் அவற்றிலிருந்து முதலைகள் மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளுக்குள் உள் நுழையும் நிலை அதிகமாகக் காணப்படுகின்றது.

கிராம மக்களால் மட்டக்களப்பு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்குத் தெரிவித்ததையடுத்து அவர்களும் வருகை தந்து கட்டி வைத்திருந்த முதலையை கடும் போராட்டத்துக்கு மத்தியில் சிரமப்பட்டு பிடித்து பாதுகாப்பாக மீட்டு மனித நடமாட்டம் அற்ற நீர்நிலையில் விடுவித்துள்ளனர்.

# வவுணதீவில் காட்டு யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு

(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலக்காடு வயல் பிரதேசத்தில் வியாழக்கிழமை(01) இரவு காட்டு யானை தாக்கி 69 வயதான விவசாயியொருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தில் காட்டு யானைத் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த விவசாயி, வவுணதீவின் விழாவெட்டுவான் இறங்குதுறையில் வசித்த 04 பிள்ளைகளின் தந்தையான 69 வயதுடைய வைரமுத்து மகாலிங்கம் என வவுணதீவு பொலிஸார் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி த.தவக்குமார் ஸ்தலத்துக்குச் சென்று விசாரணைகளில் ஈடுபட்டார்.

குறித்த விவசாயி வியாழக்கிழமை இரவு எட்டு மணியளவில் இரவு உணவு உண்ட பின் பாலக்காடு பகுதியில் உள்ள நெல் வயலுக்கு நீர்ப்பாய்ச்சல் கூலி வேலைக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், வெள்ளிக்கிழமை அதிகாலை அப்பகுதிக்குச் சென்ற கால்நடைப் பண்ணையாளர்கள் குறித்த விவசாயி காட்டு யானை தாக்கி சடலமாகக் கிடந்ததைக்கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அப்பகுதியில் நீண்டகாலமாக உலாவித் திரியும் காட்டு யானையால் இவர் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக மரண விசாரணையில் தெரியவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு முதலாம்பிரிவு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மொஹமட் ஜெமீலின் பணிப்புரைக்கமைய வவுணதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஒரு வாரகாலத்துக்கு மேல் இப்பிரதேசத்தில் காட்டு யானை உலாவித் திரிவதாகவும் இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுத்து இப்பிரதேசத்தில் உலாவித்திரியும் காட்டு யானைக் கூட்டத்தை விரட்டியடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பிரதேச விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

# இரு வருடங்களுக்குப் பின் தேவாபுரம் தரிப்பிடத்தில் நிறுத்தப்படும் ரயில்கள்

## மக்களின் கோரிக்கைக்கமைய முன்னெடுப்பு



(வாழைச்சேனை செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முறக்கொட்டாஞ் சேனை தேவாபுரம் ரயில் நிலையத்தில் இரண்டு வருடங்களுக்குப் பிறகு கொழும்பு - மட்டக்களப்பு மற்றும் மட்டக்களப்பு -கொழும்பு சேவையிலுள்ள ரயில்கள் சனிக்கிழமை(03) முதல் தரிப்பிடத்தில் நிறுத்தப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முறக்கொட்டாஞ்சேனை தேவாபுரம் ரயில் நிலையத்தில் கடந்த இரண்டு வருடங்களாக கொழும்பு - மட்டக்களப்பு, மட்டக்களப்பு - கொழும்பு சேவையில் ஈடுபடுத்தப்படும் ரயில்கள் நிறுத்தப்படவில்லை.

இதனால் வாழைச்சேனை மற்றும் ஏறாவூர் போன்ற ரயில் நிலையங்களில் இறங்கி வீட்டுக்கு வந்து சேர அதிகம் பணம் செலவாகிறது. இரவு நேரம் கொழும்பிலிருந்து வரும்போது நடு நிசியில் வீதிகளில் அலையவேண்டியுள்ளது. கொழும்புக்கு பயணம் செய்வதற்கும் அவ்வாறே நீண்ட தூரம் பயணித்து வேறு ரயில் நிறுத்தங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது.

ஆகவே, தேவாபுரம் ரயில் நிலையத்தில் கொழும்பு - மட்டக்களப்பு மற்றும் மட்டக்களப்பு - கொழும்பு ரயில்களை நிறுத்திக்கொடுக்கும்படி பொதுமக்களிடமிருந்து கடந்த வாரம் கோரிக்கை கிடைக்கப்பெற்றது.

உடனடியாகக் குறித்த விடயத்தை மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிவிவகார பிரதியமைச்சருமான அருண் ஹேமச்சந்திராவின் கவனத்துக்கு தேசிய மக்கள் சக்தியின் கல்குடா தொகுதி அமைப்பாளர் க.திலீப்குமார் கொண்டு சென்றிருந்தார்.

அதன்பிரகாரம், தேவாபுரத்துக்கு அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா கள விஜயம் மேற்கொண்டதைத் தொடர்ந்து போக்குவரத்து அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில நிலைமையை நேரடியாகவே சென்று ஆராய்ந்திருந்தார். அடுத்த கட்டமாக தேவாபுரம் ரயில் நிலையத்தில் கொழும்பு - மட்டக்களப்பு மற்றும் மட்டக்களப்பு -கொழும்பு சேவையிலுள்ள ரயில்கள் நிறுத்தப்பட ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# மூதூர் பூங்காவுக்கு முன்னால் குப்பை கொட்டுவதால் துர்நாற்றம்

## பொதுமக்கள் விசனம் தெரிவிப்பு



(தோப்பூர் செய்தியாளர்)

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் மூதூர் பொழுது போக்கு பூங்காவுக்கு முன்னால் பொதுமக்கள் குப்பைகளைக் கொட்டுவதால் துர்நாற்றம் வீசுவதோடு அலங்கோலமாக வும் காட்சியளிப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மூதூர் பிரதேச சபையால் முறையாகத் திண்மக்கழிவுகள் அகற்றப்படுகின்ற நிலையில், குறிப்பிட்ட சிலர் மக்கள் நடமாட்டம் இல்லாத நேரங்களில் கழிவுகளை வீசிச்செல்கின்றனர்.

அதிகளவில் குழந்தைகளுக்குப் பயன்படுத்தும் பம்பஸ் மற்றும் வீட்டுக்கழிவுகளே இவ்விடத்தில் அதிகளவில் கொட்டப்பட்டுள்ளன. இலங்கையில் தற்போது கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் சூழல் சுத்தம் செய்யப்படுகின்ற நிலையில், இவ்வாறு சூழலை அசுத்தப்படுத்துவோரை இனங்கண்டு தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.





***கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ், புதிய நம்பிக்கையாளர் சபையின் முதலாவது சிரமதான நிகழ்வு சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தோட்ட வளாகத்தில் சனிக்கிழமை (03) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பேஸ்இமாம் எம்.ஐ.ஆதம்பாவாவால் துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது. (பொலிவேரியன் செய்தியாளர்)***

# ஹஜ் யாத்திரைக்கு செல்பவர்களை வழியனுப்பல்

(நாவிதன்வெளி செய்தியாளர்)



இஸ்லாத்தில் ஐம்பெரும் கடமைகளில் இறுதிக் கடமையாகிய புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக புனிதமான மக்கா நகர் செல்ல இருக்கும் சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களை வழியனுப்பும் நிகழ்வு பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனிபா தலைமையில் வெள்ளிக்கிழமை(02) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமீல், மேலதிக மாவட்டப் பதிவாளர் ஏ.கே.ரினோஸா, பிரதம முகாமைத்துவ சேவை உதவியாளர்கள், நிதியுதவியாளர், காரியாலய உத்தியோகத்தர்கள் மற்றும் ஹஜ் பிரயாணம் செல்லும் உத்தியோகத்தர்களின் துணைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் இஸ்லாமிய மார்க்கச் சொற்பொழிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் மௌலவி ஐ.எல்.எம்.றிபாஸினால் நடத்தப்பட்டது. அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.எவ்.சிபானா, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.டி.நிஸாமா, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.பி.நஸ்லா ஆகிய உத்தியோகத்தர்கள் இம்முறை புனித ஹஜ் யாத்திரை மேற்கொள்பவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கோறளைப்பற்று மத்தியில் தையல் கண்காட்சி



(கல்குடா செய்தியாளர்)

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையில் இயங்கும் மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற மாணவி களின் கண்காட்சியும் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் வாழைச்சேனை 206D மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலைய வளாகத்தில் இடம்பெற்றன.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் திருமதி எம்.ஏ.சி.றமீஸா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் கே.இளங்குமுதன், கௌரவ அதிதிகளாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் ஏ.ஜுமானா ஹஸீன், மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பி. கோகுலராஜன், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட தையல் போதனாசிரியை திருமதி என்.ரவிச்சந்திரன், கிராம சேவை உத்தியோகத்தர் பீ.எம்.றம்ளான், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பஸீஹா முஜீப், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எவ்.முஜீபா, அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யஸோதா சுபாஸ்கரன் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எம்.எச்.நியாஸ், நிர்வாக உறுப்பினர்கள், தையல் பயிற்சி ஆசிரியை மற்றும் பயிற்சி பெற்ற மாணவிகளும் கலந்து சிறப்பித்தனர்.

பயிற்சியை நிறைவு செய்த மாணவிகளுக்கு அதிதிகளால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப் பட்டதுடன், அதிதிகளைக் கௌரவித்து மாணவி களால் நினைவுச்சின்னமும் வழங்கப்பட்டது.



***மட்டக்களப்பு, முகத்துவாரம் ஆழ் கடலில் நேற்றுக் காலை இராட்சத யானைத்திருக்கை மீன் பிடிக்கப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர். இவ்வாறு மீனவரொருவரால் பிடிக்கப்பட்ட மீன் கரைக்கு இழுத்து வர முடியாமல் நீண்ட நேரமாக மீனவர்கள் கடும் சிரத்தைப்பட்டதை அவதானிக்க முடிந்தது. இந்த யானைத் திருக்கை மீனின் எடை 300 கிலோவுக்கும் அதிகமாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. சுமார் 03 இலட்சம் ரூபா பெறுமதியான மீன் இது எனத் தெரிவிக்கப்படுகிறது. (காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)***

# செட்டிபாளையம் வைத்தியசாலையில் மகப்பேற்றுப் பிரிவு ஆரம்பிக்க ஏற்பாடு

(குருக்கள்மடம் செய்தியாளர்)

மட்டக்களப்பு செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலையின் மருத்துவ சேவைகளை விஸ்தரிக்கும் நோக்கில் மகப்பேற்றுப் பிரிவு ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடலொன்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் முரளீஸ்வரனின் வழிகாட்டலின் கீழ் செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலையில் சனிக்கிழமை(03) காலை 11.00 மணியளவில் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் வி.அற்புதன் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை மகப்பேற்று வைத்திய நிபுணர் கே.வசந்தராஜா, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தாய்- சேய் நல வைத்திய அதிகாரி கே. கிரிசுதன், களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி ஏ.உதயசூரியா, செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலை, பெரிய கல்லாறு பிரதேச வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

மகப்பேற்று வைத்திய நிபுணரின் வழிகாட்டலின் கீழ் சுகப் பிரசவம் நடத்தக்கூடிய சகல சாதக விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. இவ்வைத்தியசாலையின் வரலாற்றில் மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவர் வருகை தந்து வழிகாட்டியமை இதுவே முதற்றடவையாகும். செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பிரிவில் இனிவரும் காலங்களில் கர்ப்பிணித் தாய்மார்களுக்குரிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# தமிழன் வணிக உலகம்
## Thamilan Business World
www.thamilan.lk businessthamilan@gmail.com

## கொமர்ஷல் வங்கித் தலைமை அலுவலகத்தில் புதிய பெருநிறுவனக் கிளை திறப்பு





கொமர்ஷல் வங்கியானது தனது தனித்தன்மை பொருந்திய வெளிநாட்டு வங்கிக் கிளையை 'பெருநிறுவன கிளையாக' மாற்றியுள்ளதாக அறிவித்துள்ளது. இது பெருநிறுவன மற்றும் வர்த்தக வாடிக்கையாளர்களுக்கு அர்ப்பணிப்புள்ள, விரிவான நிதியியல் தீர்வுகளை வழங்குவதற்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

இந்த மாற்றமானது அதன் புகழ்பெற்ற பயணத்தில் ஒரு புதிய மைல்கல்லை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் பிராந்தியத்தில் ஒரு முக்கிய வர்த்தக மையமாக நீண்ட காலமாகச் செயற்பட்டு வரும் கொழும்பின் வளமான வர்த்தக பாரம்பரியத்துடன் எதிரொலிப்பதாகவும் வங்கி தெரிவித்துள்ளது.

இல 21, கொமர்ஷல் ஹவுஸ், கொழும்பு - 1, சேர் ரசீக் ஃபரீத் மாவத்தை (பிரிஸ்டல் வீதி) அமைந்துள்ள வங்கியின் தலைமை அலுவலகத்தில் மூலோபாய ரீதியாக அமைந்துள்ள இந்த மீளநாமமிடப்பட்ட பெருநிறுவனக் கிளையானது இலங்கையில் முதன்முதலாக நிறுவன வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கேற்றவாறு வடிவமைக்கப்பட்ட ஒரு முதன்மையான நிதி நிலையமாகத் திகழ்வதாக வங்கி தெரிவித்துள்ளது. இந்த மாற்றமானது இணையற்ற சேவைச் சிறப்பு, தனிப் பயனாக்கப்பட்ட நிதியியல் தீர்வுகள் மற்றும் நீண்டகால வர்த்தக பங்குடைமைகளை வளர்த்தல் என்ற வங்கியின் தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்ததாகவுள்ளது.

இந்த மூலோபாய முயற்சி குறித்து கருத்து தெரிவித்த கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் /பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க, ''எங்கள் தலைமை அலுவலகம் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க டெல்ஃப்ட் நுழைவாயில், டச்சு கோட்டைக்கு வழிவகுத்தது போல, எமது வங்கிக் கிளையும் இலங்கையின் கடற்கரைகளுக்கப்பால் நீடித்த மற்றும் வளமான வர்த்தக ஒத்துழைப்புகளின் புதிய சகாப்தத்தை உருவாக்கும் என்பது எமது நம்பிக்கையாகும்" - என்று கூறினார்.

தடையற்ற வங்கி அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த பெருநிறுவனக் கிளையானது, விரிவான வர்த்தக நிதி, திறைசேரி சேவைகள், வெளிநாட்டு வங்கி, பிற தனிப்பயனாக்கப்பட்ட நிதியியல் தெரிவுகள் மற்றும் நிபுணர் ஆலோசனை ஆதரவு உள்ளிட்ட விரிவான நிதியியல் தீர்வுகளை வழங்குவதுடன் மேலும் உறவு அடிப்படையிலான வங்கிச் சேவையில் புதுப்பிக்கப்பட்ட கவனத்தையும் செலுத்தவுள்ளது.

## புதிய வடிவில் மீள அறிமுகமாகும் Clogard Natural Salt






இலங்கையின் நம்பிக்கைக்குரிய வாய்ச் சுகாதார வர்த்தகநாமமாக விளங்கும் Hemas Consumer Brands நிறுவனத்துக்குச் சொந்தமான க்ளோகார்ட் (Clogard), வலுவான பற்கள் மற்றும் ஆரோக்கியமான ஈறுகளைப் பெறுவதை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட தனது பிரபலமான Clogard Natural Salt Toothpaste தயாரிப்பைப் புதுப்பித்து மீள அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறது. புதிய வடிவமைப்பாக வெளியான இந்தப் பற்பசை, வலுவான பற்கள் மற்றும் ஆரோக்கியமான ஈறுகளை உருவாக்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

தேசிய வாய்ச் சுகாதார ஆய்வின்படி, 5 சிறுவர்களில் ஒருவர் ஈறு தொடர்பான பிரச்சினைகளால் பாதிக்கப்படுவதாகவும் நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 50% ஆனோர் ஈறு பிரச்சினைகளால் பாதிக்கப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனைக் கருத்திற்கொண்டு ஈறு பிரச்சினைகளை நேரடியாக நிவர்த்தி செய்யும் சில பற்பசை வர்த்தகநாமங்களில் ஒன்றாக விளங்கும் க்ளோகார்ட், தனது பற்பசையில் புளோரைட் கொண்டுள்ள விஞ்ஞான ரீதியான ஆதரவையும் உப்பின் இயற்கையான கிருமிகளை அழிக்கும் தன்மையையும் இணைப்பதன் மூலம் முழுக் குடும்பத்தினரும் தினமும் பயன்படுத்தக்கூடிய திறனான வாய்ச் சுகாதாரத்தை வழங்க ஒரு புத்தாக்கமான செயல்திறனுடன் கூடிய வாய்ச் சுகாதாரத் தீர்வைக் கொண்டுவந்துள்ளது.

புதுப்பிக்கப்பட்ட Clogard Natural Salt ஆனது, பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட அறிவையும் நவீன வாய்ச் சுகாதார தொழில்நுட்பத்தையும் இணைத்த வடிவமாக, பாதுகாப்பான, கட்டுப்படியான விலையில் மக்களுக்கு இலகுவாக அணுகக்கூடிய பற்பசையாக வெளிவந்துள்ளது. இந்த மீள்அறிமுகத்தின் ஓர் அங்கமாக இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் மாறுபட்ட செயற்பாடுகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகளை இவ்வர்த்தகநாமம் ஏற்பாடு செய்துள்ளது.

## Prime Residencies மூலம் Colombo Border இன் இறுதி அங்கமாக 'Tower Amari' அறிமுகம்




இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் வடிவமைப்பாளரான Prime Lands Residencies PLC, தனது முக்கியத்துவம் வாய்ந்த Colombo Border திட்டத்தின் மூன்றாவதும் இறுதி அங்கமுமாக 'Tower Amari' ஐ அறிமுகம் செய்துள்ளது. இந்த அறிவித்தலினூடாக, Prime Residencies இன் நகர வசிப்பிட தொகுதி பூர்த்தியடைய வுள்ளதுடன், சொகுசான நகரப்புற வசிப்பிட நியமங்களை மாற்றியமைக்கும் வகையிலும் அமைந்திருக்கும்.

Tower Amari வெற்றிகரமான அடிக்கல் நாட்டல் மற்றும் திட்டத் தின் முன்னைய கட்டங்களின் நிர்மாண செயற்பாடுகளைத் தொடர்வதாக அமைந்திருந்தது. Tower Amariக்கான piling பணிகள் ஏற்கனவே பூர்த்திசெய்யப்பட்டுள்ள நிலையில், இறுதிக்கட்டத்தின் போது, முதலாவது மற்றும் இரண்டாம் கட்ட முன்னைய நிர்மாணங்களான Brielle மற்றும் Cosmos Towers ஆகியவற்றைப் போல அட்டவணைக்கமைய நிர்மாணிக்கப்படும்.

ரூ. 35 மில்லியனிலிருந்து ஆரம்பிக்கும் 2 மற்றும் 3 படுக்கையறைகளைக் கொண்ட தொடர்மனைகளைக் கொண்டதாக இந்தத் திட்டம் அமைந்திருக்கும். கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் வீட்டு உரிமையாளர்களுக்கு புரட்சிகரமான Prime MAX சாத்திய மான திட்டத்தின் பலன்களை அனுபவிக்க முடியும். ரூ. 1,75,000 எனும் மாதாந்தக் கொடுப்பனவில் கனவு இல்லத்தைப் பெற்றுக்கொள் வதற்கும், சொகுசான வசிப்பி டத்தை அணுகுவதற்கும் வாய்ப்பை வழங்கும்.

Tower Amari இன் அறிமுகத்தினூ டாக சொகுசு, நிலைபேறாண்மை மற்றும் சமூகம் ஆகியவற்றுடனான அதிசிறந்த வசிப்பிட பகுதிகளை ஏற்படுத்தும் Prime Residencies இன் அர்ப்பணிப்பு வெளிப்ப டுத்தப்பட்டுள்ளது. இந்த விலை மதிப்பு நிறைந்த திட்டத்தின் இறுதி அங்கமாக அமைந்துள்ள Tower Amari இன் பிரத்தியேகமான வடிவமைப்பு மற்றும் சூழல் பொறுப்புணர்வு ஆகியன இலங்கையில் சொகுசான வசிப்பிடத்துக்கான வரைவிலக்க ணமாக அமைந்திருக்கும்.

## 'சஹசக் நிமாவும்' இன் உத்தியோகபூர்வ பங்குதாரராக NDB வங்கி

NDB வங்கியானது ஐந்தாவது சர்வதேச கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்க கண்காட்சி மற்றும் போட்டியான 'சஹசக் நிமாவும்' க்கு இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழுவுடன் (SLIC) கூட்டுச் சேர்ந்து உள்நாட்டில் கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கங்களை விருத்தி செய்வதற்கான தனது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறது. இதன் மூலம் NDB வங்கியானது படைப்பாற்றல், பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய மற்றும் உள்ளடக்கிய முன்னேற்றத்தின் தேசிய அடையாளமாக விருத்தியடைந்துள்ள அமைப்புக்கூறு ஒன்றுக்கான



உத்தியோகபூர்வ வங்கி பங்குதாரராக தனது ஆதரவைத் தொடர்கிறது.

பல மாதங்களாக நடைபெற்ற பிராந்திய மற்றும் மாகாணப் போட்டிகளின் சிறப்பம்சமாக சஹசக் நிமாவும் தேசிய கட்டப் போட்டியானது 2025 ஏப்ரல் 25 முதல் 27 வரை கொழும்பு BMICH இல் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இலங்கை முழுவதிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 1,000 க்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன. இதில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், முப்படைகள், தொழில்முறை நிறுவனங்கள் ஆகியவற்றுடன் சுயாதீன கண்டுபிடிப்பாளர்களும் பங்கேற்றனர். சிறப்பு சர்வதேசப் பிரிவானது ருமேனியா, புருனே மற்றும் ஈரானைச் சேர்ந்த கண்டுப்பிடிப்பாளர்களை ஒன்றிணைத்ததன் மூலம் இந்த ஆண்டு பதிப்பை உண்மையிலேயே உலகளாவிய கண்டுபிடிப்புகளுக்கான கொண்டாட்டமாக மாற்றியது.

NDBயானது இந்த முயற்சியை நிலைத்தன்மை நிலைப்பாட்டிலிருந்து உள்ளடக்கிய பொருளாதார மாற்றத்துக்கான ஊக்கியாகக் கருதுகிறது.

## லங்கா அல்சைமர் அறக்கட்டளை அறிமுகப்படுத்தும் சிறுவர்களுக்கான விழிப்புணர்வூட்டும் புத்தகம்






டிமென்ஷியா நோயுடன் வாழ்ந்துவரும் நபர்கள் தொடர்பில் புரிதலை ஏற்படுத்துவதற்கும் அவர்கள் மீது பரிவு மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் முன்னோடி சிறுவர் புத்தகமொன்று வெளியிடப்படுவதை லங்கா அல்சைமர் அறக்கட்டளை பெருமையுடன் அறிவிக்கின்றது. எட்டு வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் வாசிக்கக்கூடிய வகையில் மிகவும் அழகான சித்திரங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தப் புத்தகம், அல்மைசர் நோயைக் கொண்டவர்கள் குறித்த இதயபூர்வமான விடயங்களை வெளிப்படுத்துவதுடன், குடும்பத்துக்குள் அர்த்தமுள்ள கலந்துரையாடல்களை ஊக்குவிக்கும் அதேநேரம், அன்புக்குரியவர்கள் மத்தியில் ஏற்படக்கூடிய மாற்றத்தை இளம் வாசகர்கள் உணர்ந்து கொள்வதற்கான வழியை ஏற்படுத்தும்.

தினப்பதிவேடொன்றை எழுதுமாறு பாடசாலையில் வழங்கப்பட்ட பணியை முன்னெடுக்கும் சிறுமியொருவரின் பார்வையினூடாகச் சொல்லப்படும் இந்தக் கதை, நினைவாற்றல் இழப்பு மற்றும் டிமென்ஷியாவுக்கான அறிகுறிகளுக்கு முகங்கொடுக்கும் அன்புக்குரிய பாட்டிக்கும் அச்சிறு மிக்குமிடையில் வளர்ந்துவரும் அன்பான உறவுடன் நகர்ந்து செல்கின்றது. பாட்டியின் நடத்தையில் மாற்றங்களை அவதானிக்கும் சிறுமி, பெற்றோரின் உதவியுடன் அதனைக் கண்டுபிடிக்கும் பயணத்தை ஆரம்பித்து, பொறுமை, அன்பு மற்றும் பொக்கிஷமான நினைவுகள் மூலம் படிப்படியாக நிலைமையைக் கற்றுக்கொள்கின்றார். ஞாபகமறதி, குழப்பம் மற்றும் நபர்களில் ஏற்படக்கூடிய மாற்றம் போன்ற டிமென்ஷியாவுடன் தொடர்புபட்ட அறிகுறிகள் பற்றிய எளிமையான ஆனால், சக்திவாய்ந்த விளக்கத்தை இந்தப் புத்தகம் வழங்குகின்றது. இந்தப் புத்தகம் கருணை, மீளும் தன்மை மற்றும் முக்கியமான தருணங்களைப் பகிர்ந்துகொள்வது போன்றவற்றின் அவசியத்தை எடுத்துக்காட்டுவதுடன், கடந்த கால நினைவுகள் மற்றும் சிறுவர்களின் வாழ்க்கையில் தாத்தா, பாட்டிமார் வகிக்கும் விலைமதிப்பற்ற வகிபாகத்தையும் கொண்டாடுகின்றது. ஈடுபாட்டுடன் கதைசெல்லும் முறையினூடாக வயதுக்கேற்றவாறும் ஆதரவான முறையிலும் டிமென்ஷியாவைப் பற்றி குடும்பங்கள் மத்தியில் கலந்துரையாடல்கள் ஏற்படுவதையும் இந்தப் புத்தகம் ஊக்குவிக்கின்றது. அனைவரையும் சென்றடையும் நோக்கில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இப்புத்தகம் கிடைக்கின்றது.

இந்தப் புத்தகம் வெளியிடப்பட்ட பின்னர் லங்கா அல்சைமர் அறக்கட்டளை, புத்தகங்களை வாசிக்கும் நிகழ்வுகள், பாடசாலை நூலகங்களுக்கு புத்தகங்களை வழங்குதல் மற்றும் சமூகங்கள் மத்தியிலான கலந்துரையாடல்கள் போன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் நாடு முழுவதிலும் தொடர்ச்சியான விழிப்புணர்வுத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது. மூன்று மாத காலப் பகுதியில் நிர்வகிக்கக் கூடிய வகையில், லங்கா அல்சைமர் அறக்கட்டளையின் வலுவான சமூக வலையமைப்புகள் இலங்கை முழுவதுமுள்ள சிறுவர்கள் மற்றும் குடும்பங்களிடம் இப்புத்தகம் சென்றடைவதை உறுதிப்படுத்தும்.


## Now you can subscribe the following Newspapers

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

## உச்ச கட்டத்தில் இந்தியா – பாக். போர் பதற்றம்;

# பாரதப் பிரதமர் மோடியுடன் விமானப்படைத் தளபதி சந்திப்பு



இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்துவரும் நிலையில், இந்திய விமானப்படைத் தளபதி எயார்மார்ஷல் அமர் பிரீத் சிங், பிரதமர் மோடியை நேற்று (04) சந்தித்துள்ளார்.

இதன்போது, பயங்கரவாதத் தாக்குதல் நடத்திய பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுப்பது தொடர்பாக, விமானப்படைத் தலைமை தளபதியுடன் பிரதமர் மோடி முக்கிய ஆலோசனையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக நேற்றுமுன்தினம் (03) பிரதமர் மோடியை கடற்படையின் தலைமை அட்மிரல் தினேஷ் கே.திரிபாதி சந்தித்த நிலையில், நேற்று (04) விமானப் படை தளபதியின் சந்திப்பு நடந்துள்ளது.

இச்சந்திப்பானது பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து, பிரதமர் மோடி தலைமையில், பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படைகள் தலைமைத் தளபதி அனில் சௌகான் மற்றும் முப்படைத் தளபதிகள், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்துக்கு சில நாட்களுக்கு பின்னர் இடம்பெற்றுள்ளது.

முன்னதாக, ஏப்ரல் 22ஆம் திகதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டத்தைத் தொடர்ந்து, ஏப்ரல் 23ஆம் திகதி பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுக் கூட்டம் நடந்தது. அதில், பயங்கரவாதத்துக்கு பதிலடி கொடுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. பஹல்காம் தாக்குதலுக்கு காரணமானவர்களும், அதற்கு பின்னால் உள்ள சதிகாரர்களும் கடுமையான தண்டனையை எதிர்கொள்வார்கள் என்று அரசு தெரிவித்தது.

தொடர்ந்து, பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் பதிலடிக்கான நேரம், வழிமுறை, இலக்குகளைத் தீர்மானிப்பதற்கான முழு செயற்பாட்டுச் சுதந்திரத்தை அரசு, பாதுகாப்புப் படைகளுக்கு வழங்கியது.

பஹல்காம் தாக்குதலுக்கு பின்பு அரசு அனைத்துக்கட்சி கூட்டத்தையும் கூட்டியது. அப்போது பயங்கரவாதத் தாக்குதலுக்கு காரணமானவர்களுக்கு எதிராக அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு வழங்குவதாக பல்வேறு கட்சிகளும் உறுதியளித்தன.

பஹல்காம் கொடூரத் தாக்குதலை நடத்தியது பாகிஸ்தான் ஆதரவு பெற்ற லஷ்கர்-இ-தொய்பா என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேலும் அந்த தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் இராணுவத்தின் உளவு அமைப்பு தேவையான உதவிகளை செய்துகொடுத்திருப்பதும் தேசிய புலனாய்வு அமைப்பு (NIA) நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தம், அட்டாரி எல்லை சோதனைச் சாவடி மூடல், பாகிஸ்தானியர்களுக்கு விசா இடைநிறுத்தம், வர்த்தகம் நிறுத்தம், இறக்குமதித் தடை உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த பாப்பரசர் நானே...




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பாப்பரசரின் உடையிலிருப்பது போன்ற புகைப்படமொன்று சமூக வலைதளப் பக்கத்தில் வைரலாகியுள்ளது.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் (வயது 88) கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி உடல்நலக்குறைவால் காலமானார். இந்நிலையில் இலட்சக்கணக்கானோரின் கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில் பாப்பரசரின் திருவுடல் அவரது விருப்பப்படி உரோமிலுள்ள புனித மேரி தேவாலயத்தில் ஏப்ரல் 26ஆம் திகதி நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதேவேளை, புதிய பாப்பரசரை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு நடைமுறை இந்த வாரம் தொடங்கவுள்ளது.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், பாப்பரசரின் உடையிலிருப்பது போன்ற புகைப்படமொன்றை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட இப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது. இப்படத்தை வெள்ளை மாளிகையும் எக்ஸ் தளத்தில் பகிர்ந்து கொண்டுள்ளது.

இந்த வேளையில் ட்ரம்ப் வெளியிட்ட புகைப்படம் பேசுபொருளாகியுள்ளது. சமூக ஊடகத்தில் சிலர் இந்தப் படத்தை வேடிக்கையாக பார்த்தாலும் பலர் ஏமாற்றம் தெரிவித்துள்ளனர்.

இப்பதிவு அவமரியாதைக்குரியது, பாப்பரசர் பிரான்சிஸ் மரணத்தை ட்ரம்ப் கேலி செய்கிறார் என்று அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

முன்னதாக ஜனாதிபதியாக பதவியேற்று 100 நாட்கள் நிறைவு கொண்டாட்டத்தில் செய்தியாளர்களிடம் ட்ரம்ப் பேசுகையில், "நான் பாப்பரசராக விரும்புகிறேன், அதுவே எனது முதல் தெரிவாக இருக்கும்" என்று நகைச்சுவையுடன் குறிப்பிட்டார்.

இதற்கு எதிர்வினையாற்றிய தெற்கு கெரோலினா எம்.பி. லிண்ட்சே கிரகம், "அடுத்த பாப்பரசராக ட்ரம்ப் விருப்பம் தெரிவித்திருப்பது மகிழ்ச்சி. அடுத்த பாப்பரசரை தெரிவு செய்யும்போது கார்டினல்கள் இதை கவனத்திற்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.


## இந்தியக் கப்பல்களுக்கு பாகிஸ்தான் தடை

இந்தியக் கப்பல்கள் பாகிஸ்தான் துறைமுகங்களுக்குச் செல்ல அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

பாகிஸ்தான் கப்பல்களுக்குத் தடை விதிப்பதாக இந்திய அரசு அறிவித்ததையடுத்து பாகிஸ்தானும் தடைவிதித்ததுள்ளது.

## இந்தியா மீது அணு ஆயுத தாக்குதல் நடத்துவோம்!

### மிரட்டும் பாகிஸ்தான்



இந்தியா - பாகிஸ்தான் இடையிலான போர்ப் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், "எங்கள் மீது இந்தியா தாக்குதல் நடத்தினால், வழக்கமான பதிலடியோடு அணு ஆயுதங்களையும் பயன்படுத்துவோம்" என்று ரஷ்யாவுக்கான பாகிஸ்தான் தூதுவர் மிரட்டல் விடுத்துள்ளார்.

ரஷ்யாவுக்கான பாகிஸ்தான் தூதுவர் முகம்மது காலித் ஜமாலி ஆர்டி ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில், ''இந்தியாவின் வெறித்தனமான ஊடகங்களும், அங்கிருந்து வரும் சில பொறுப்பற்ற அறிக்கைகளும் எங்களை சில கட்டாயத்துக்கு நிர்ப்பந்திக்கின்றன. அங்கிருந்து கசிந்துள்ள சில தகவல்கள் பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதலுக்கு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றன.

இந்தியா - பாகிஸ்தான் போர் என்று வரும்போது நாங்கள் எண்ணிக்கை பலம் பற்றி விவாதித்துக் கொண்டிருக்க விரும்பவில்லை. நாங்கள் வழக்கமான பதிலடியோடு, அணு ஆயுதங்களையும் பயன்படுத்துவோம். பாகிஸ்தான் மக்களின் முழு ஆதரவுடன் இராணுவம் முழு சக்தியையும் வெளிப்படுத்தும்." என்றார்.

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காம் தாக்குதலுக்கு தீவிர பதிலடி கொடுக்கப்படும் என்று இந்தியா தெரிவித்திருந்தது. இச்சூழலில், பாகிஸ்தான் அமைச்சர்கள், முன்னாள் தலைவர்கள் எனப் பலரும் அவ்வப்போது இந்தியாவுக்கு மிரட்டல் விடுத்து வருகின்றனர்.

**130 அணு ஆயுதங்கள்**

அந்த வகையில் பாகிஸ்தான் ரயில்வே அமைச்சர் ஹனிப் அப்பாஸி, "சிந்து நதியில் இந்தியா தண்ணீரை நிறுத்தினால், போருக்கு தயாராக இருக்க வேண்டும். கோரி, ஷஹீன் மற்றும் ஹஸ்னவி போன்ற ஏவுகணைகளையும், 130 அணு ஆயுதங்களையும் நாங்கள் காட்சிக்கு வைத்திருக்கவில்லை. இந்தியாவுக்காகத்தான் வைத்துள்ளோம்" எனத் தெரிவித்திருந்தார். ***'இருப்புக்கு அச்சுறுத்தல் வந்தால்..'*** - அதேபோல், ஜியோ நியூஸ் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா முகமது ஆசிப், "சிந்து நதியில் புதிதாக எந்தவொரு கட்டமைப்பையும் கட்டுவது, இந்தியாவின் ஆக்கிரமிப்பாக பார்க்கப்படும். அவர்கள் சிந்து நதியில் ஏதாவது கட்டமைப்பைக் கட்ட முயன்றால், அதனை நாங்கள் கட்டாயம் தாக்குவோம்.

அணு ஆயுத விடயத்தில் பாகிஸ்தான் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கும். அதேநேரத்தில், எங்கள் இருப்புக்கு நேரடி அச்சுறுத்தல் இருந்தால் மட்டுமே அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோம்." என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலிய பாராளுமன்றத் தேர்தல்;

# மீண்டும் பிரதமராகிறார் அந்தனி அல்பனீஸ்



அவுஸ்திரேலிய பாராளுமன்றத் தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி பெரும்பான்மை இடங்களில் முன்னிலையிலுள்ள நிலையில், 2ஆவது முறையாகவும் அந்நாட்டு பிரதமராக அந்தனி அல்பனீஸ் (Anthony Albanese) பொறுப்பேற்கவுள்ளார்.

அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தின் 48ஆவது கீழவையைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில், ஆளும் தொழிலாளர் கட்சி, பீட்டர் டட்டன் தலைமையிலான லிபரல்/ தேசியவாதக் கூட்டணி, ஆடம் பான்ட் தலைமையிலான கிரீன் கட்சி உள்ளிட்டவை போட்டியிட்டன. 150 இடங்களைக் கொண்ட கீழவையில் குறைந்தது 76 தொகுதிகளில் வெற்றி பெறும் கட்சி அடுத்த ஆட்சியை அமைக்கும் என்ற சூழலில், வாக்குப் பதிவு முடிந்த சிறிது நேரத்தில் வாக்கு எண்ணும் பணிகள் நடைபெற்றன.

67.84 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், பிரதமர் அந்தனி ஆல்பனீஸ் தலைமையிலான தொழிலாளர் கட்சி 85 இடங்களில் வெற்றிபெறும் நிலையில் உள்ளது. முந்தைய 2022 தேர்தலைவிட அந்தக் கட்சிக்கு கூடுதலாக 8 இடங்கள் கிடைக்கின்றன.

விலைவாசி, உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற தன்மை ஆகிய பிரச்சினைகளை மையப்படுத்தி நடைபெற்ற இந்தத் தேர்தலுக்கான பிரசாரத்தில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் ஆட்சி பாணியில் தங்களது அரசு செயற்படாது என்று பிரதமர் ஆல்பனீஸ் உறுதியளித்தார். ட்ரம்ப்புக்கு எதிரான அலை வீசும் நிலையில், ஆளுங்கட்சியின் இந்த பிரசார உத்திதான் முன்பை விட கூடுதல் தொகுதிகளுடன் இந்த எதிர்பாராத வெற்றிக்குக் கைகொடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அதேநேரம், எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டனின் தேசியவாதக் கருத்துகள் ட்ரம்ப்பை பிரதிபளிப்பவையாகக் கருதப்பட்டன. ட்ரம்ப்புடனான ஒப்பீட்டிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வதற்கான அவரின் முயற்சி வெற்றி பெறவில்லை என்று கூறப்படுகிறது. இதன் காரணமாக, அவரது கட்சி 12 தொகுதிகளை இழந்து 41 இடங்களில் மட்டுமே வெற்றிபெறும் நிலையில் உள்ளது. பீட்டர் டட்டன் தனது சொந்தத் தொகுதியிலேயே தோல்வியடைந்தார்.

2022 தேர்தலில் 4 இடங்களில் வெற்றி பெற்ற கிரீன் கட்சிக்கு ஒரு இடமும், கேட்டர்ஸ் அவுஸ்திரேலியன் கட்சி மற்றும் மத்தியக் கூட்டணிக்கு தலா ஓர் இடமும் கிடைத்தன.

இந்த வெற்றியின் மூலம், 62 வயதாகும் அந்தனி ஆல்பனீஸ் நாட்டின் பிரதமராக இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்கவிருப்பது உறுதியாகியுள்ளது. கடந்த 2004ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்நாட்டில் ஒருவர் இரண்டாவது முறையாக பிரதமர் பதவியைப் பெறுவது இதுவே முதன்முறையாகும்.

தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து தொழிலாளர் கட்சியினரிடையே அந்தனி ஆல்பனீஸ் உரையாற்றுகையில்,

"அவுஸ்திரேலியாவின் பண்பாட்டை மீட்டெடுப்பதற்காக மக்கள் வாக்களித்துள்ளனர். நாட்டின் எதிர்காலம் அவுஸ்திரேலிய கலாசாரத்திலிருந்து விலகாமல், பிற நாடுகளிலிருந்து வேறுபட்டு இருப்பதை உறுதிசெய்வதற்காக அவுஸ்திரேலிய பாணியில் மக்கள் வாக்களித்துள்ளனர்.

நாம் எந்தவொரு வெளிநாட்டிடம் (அமெரிக்கா) இருந்தும் கொள்கைகளைக் கடன் வாங்கவோ, பிரதியெடுக்கவோ தேவையில்லை. நமக்கென்று ஒரு தனித்தன்மை இருக்கிறது" - என்றார்.

தேர்தல் பிரசாரத்தின்போது ட்ரம்ப் பயன்படுத்திய வார்த்தைகளையே எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன் பயன்படுத்தியது, ட்ரம்ப்பைப் போலவே பன்முகத் தன்மை, அனைத்து பிரிவினரையும் உள்ளடக்குவது ஆகிய கொள்கைகளை அவர் கடுமையாக எதிர்த்தது, அவரின் பல கருத்துகள் ட்ரம்ப் கருத்துகளோடு ஒத்துப்போனது போன்ற காரணங்களால் பீட்டர் டட்டன் ஆட்சிக்கு வந்தால் அது ட்ரம்ப் பாணியிலிருக்கும் என்று கருதப்பட்டது. அதைக் குறிப்பிட்டே தனது வெற்றி உரையில் அந்தனி அல்பனீஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## சிங்கப்பூர் பாராளுமன்றத் தேர்தல்; ஆட்சியைக் கைப்பற்றிய ஆளுங்கட்சி!

### மீண்டும் பிரதமராகிறார் லோரன்ஸ் வோங்க்




சிங்கப்பூர் பாராளுமன்றத் தேர்தலில் தொடர்ச்சியாக 14ஆவது முறையாகவும் ஆளுங்கட்சியான பி.ஏ.பி. வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது. இந்நிலையில் லோரன்ஸ் வோங்க் மீண்டும் பிரதமராக பதவியில் தொடர்கிறார்.

சிங்கப்பூர் பாராளுமன்ற தேர்தல் கடந்த சனிக்கிழமை நடைபெற்று முடிந்த நிலையில், முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆளுங்கட்சியான பிஏபி கட்சி இமாலய வெற்றிபெற்று ஆட்சியை தக்க வைத்துக் கொண்டுள்ளது. மொத்தமுள்ள 97 இடங்களில் 87 இடங்களை அக்கட்சியே கைப்பற்றியுள்ளது. இதையடுத்து, சிங்கப்பூர் பிரதமராக லோரன்ஸ் வோங்க் மீண்டும் பதவியில் தொடருகிறார்.

ஜனநாயக தேசமான சிங்கப்பூர், மக்கள் செயல் கட்சியின்(பிஏபி) கோட்டையாக திகழ்கிறது. அக்கட்சியே கடந்த தேர்தலிலும் வெற்றி பெற்ற நிலையில், அக்கட்சியின் மூத்த தலைவர் லோரன்ஸ் வோங்க் பிரதமராகப் பதவி வகிக்கிறார்.

சிங்கப்பூரில் கடந்த 1965ஆம் ஆண்டுக்குப் பின்னர், தொடர்ந்து 60 ஆண்டுகளாக பிஏபி கட்சி ஆட்சியில் நீடிக்கிறது.

வெளிப்படையான அரசு நிர்வாகமும், சிங்கப்பூரின் அசுரத் தனமான பொருளாதார வளர்ச்சியும் பிஏபி கட்சி மீதான மக்களின் நம்பிக்கைக்கு முக்கிய காரணங்களாக விளங்குகின்றன. இந்நிலையில், சிங்கப்பூர் தேர்தலில் தொடர்ச்சியாக 14ஆவது முறையாக ஆளுங்கட்சி வெற்றிபெற்றுள்ளது. மீண்டும் சிங்கப்பூர் பிரதமராக லோரன்ஸ் வோங்க் மீண்டும் பதவியில் தொடருகிறார். இதையடுத்து, அவருக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். "பொதுத்தேர்தலில் பெரும் வெற்றி பெற்ற லோரன்ஸ் வோங்கை மனதார வாழ்த்துகிறேன். இந்தியாவும் சிங்கப்பூரும் பன்முக பங்களிப்பை பகிர்ந்துகொண்டுள்ளது. இருநாட்டு மக்களும் இணக்கமாக உறவைக் கடைப்பிடிக்கின்றனர். இந்நிலையில், சிங்கப்பூருடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றுவதை எதிர்நோக்கியுள்ளேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.



**இஸ்ரேல் விமான நிலையத்தை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நேற்று (04) ஏவுகணைத் தாக்குதல் நடத்தினர். இஸ்ரேலின் டெல் அவிவ் நகரிலுள்ள சர்வதேச விமான நிலையமான பென் குரின் விமான நிலையத்தை குறிவைத்து ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.**

**இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பையும் மீறி ஏவுகணை விமான நிலையத்திற்குள் உள்ளே ஓடுதளம் அருகே இருந்த வீதியில் விழுந்துள்ளது. இந்த சம்பவத்தில் 7 பேர் காயமடைந்தனர்.**

**இந்த ஏவுகணை தாக்குதலைத் தொடர்ந்து விமான நிலையத்தில் விமான சேவை சில நிமிடங்கள் இரத்து செய்யப்பட்டன. தற்போது விமான சேவை இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.**

# கண்டி மாவட்ட உள்ளூராட்சி தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில்

## மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)

2025ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் கண்டி மாவட்டத்தில் தயார் செய்யப்பட்டுள்ளதாக கண்டி மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்டச் செயலாளருமான இந்திக உடவத்த தெரிவித்துள்ளார்.

இதற்குத் தேவையான வாக்குச் சாவடிகள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தலுக்கு முந்தைய நாள் உரிய வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்படுமென்றும் அவர் கூறினார்.

நேற்று (04) காலை கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்டத் தேர்தல் நடவடிக்கை தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்தில் கலந்துகொண்டு தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

''கண்டி மாவட்டத்திலுள்ள 22 உள்ளூராட்சி சபைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட 18 அரசியல் கட்சிகள் மற்றும் 20 சுயேச்சைக் குழுக்களிலிருந்து 637 உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு மாநகர சபை, 04 நகர சபைகள் மற்றும் 17 பிரதேச சபைகளுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

இந்த ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலுக்கு பன்னிரெண்டு இலட்சத்து இரண்டாயிரத்து ஐநூற்று ஐம்பத்தெட்டு (1,202,558) பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.



கண்டி மாவட்டத்தில் 937 வாக்களிப்பு நிலையங்களும் 368 வாக்கு எண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

பிரதான செயற்பாட்டு அலுவலகம் மற்றும் தீர்மானங்கள் குறித்து முடிவெடுக்கும் குழு கண்டி மாவட்ட செயலகத்திலிருந்து செயற்படுமெனவும் குறித்த நேரத்தில் வாக்குப் பெட்டி வெளியீட்டு மையங்களாக கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரி மற்றும் கண்டி வாரியபொல ஸ்ரீ சுமங்கல கல்லூரியாகும் எனவும் தெரிவத்தாட்சி அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## முச்சக்கர வண்டிகளைத் திருடி காதலியுடன் சுற்றித்திரிந்த இளைஞன் ஹெரோயினுடன் மடக்கிப் பிடிப்பு

(எம்.ஏ.எம்.ஹசனார்)

முச்சக்கரவண்டிகளைத் திருடி காதலியுடன் சுற்றித்திரிந்த இளைஞரை 220 மில்லி கிராம் ஹெரோயின் பொதிகளுடன் கைது செய்த பொலிஸார் திருடப்பட்ட மூன்று முச்சக்கர வண்டிகளையும் மீட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

வெலிமடை, ரத்தம், ஊவாபரணகம போன்ற பிரதேசங்களில் முச்சக்கர வண்டிகளை அவ்வப்போது திருடி காதலியுடன் சுற்றித்திரிந்த 24 வயது இளைஞரொருவர் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து வெலிமடை தோட்டப் பகுதிக்குச் சென்று நேற்று முன்தினம்(03) சுற்றி வளைத்த ஊவாபரணகம பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்துள்ளதாகத் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் நீண்ட காலமாக ஹெரோயின் போன்ற போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு வரும் நபரெனவும் இப்போதைப்பொருளை பாவித்த பின்னர் அடிக்கடி முச்சக்கரவண்டிகளைத் திருடி ஆங்காங்கு தனது காதலியுடன் சுற்றித்திரிந்து ஓட்டோக்களை வெவ்வேறு மறைவிடங்களில் கைவிட்டுச் சென்று வருபவரெனவும் இவரால் திருடப்பட்ட மூன்று முச்சக்கர வண்டிகளை பொலிஸார் கண்டுபிடித்துள்ள அதேவேளை, சந்தேகநபரிடமிருந்து 2,200 மி.கி.ஹெரோயின் போதைப்பொருள் பொதியொன்றைக் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபரை வெலிமடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ள பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## உள்ளூராட்சித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மாத்தளை மாவட்டத்தில் பூர்த்தி

### தேர்தல் உதவி ஆணையாளர் புஷ்பகுமார தெரிவிப்பு

மாத்தளை மாவட்டத்தில் நாளை 06ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக மாவட்டத் தேர்தல் உதவி ஆணையாளர் எச்.ஏ. புஷ்பகுமார தெரிவித்தார்.

இத்தேர்தலில் மாத்தளை மாவட்டத்திலிருந்து 43,04,246 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதுடன் இவர்களில் 20,264 வாக்காளர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றிருந்தனர். மாவட்டத்திலுள்ள 515 கிராம சேவகர் அலுவலகப் பிரிவுகளில் 342 வாக்குச்சாவடிகளில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்புகள் இடம்பெறவுள்ளன.

இம்மாவட்டத்தில் மொத்தம் 13 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. இதனடிப்படையில், மாத்தளை மாநகர சபைக்கு 31,888 வாக்காளர்களும் தம்புள்ளை மாநகர சபைக்கு 20,267 வாக்காளர்களும் கலேவல பிரதேச சபைக்கு 63,263 வாக்காளர்களும் பல்லேபொல பிரதேச சபைக்கு 26,866 வாக்காளர்களும் தம்புள்ளை பிரதேச சபைக்கு 42,448 வாக்காளர்களும் அம்பன்கங்க பிரதேச சபைக்கு 14,124 வாக்காளர்களும் லக்கல பிரதேச சபைக்கு 13,614 வாக்காளர்களும் நாவுல பிரதேச சபைக்கு 25,071 வாக்காளர்களும் வில்கமுவ பிரதேச சபைக்கு 26,195 வாக்காளர்களும் மாத்தளை பிரதேச சபைக்கு 37,443 வாக்காளர்களும் யட்டவத்த பிரதேச சபைக்கு 27,312 வாக்களர்களும் உக்குவளை பிரதேச சபைக்கு 60,011 வாக்காளர்களும் இரத்தோட்ட பிரதேச சபைக்கு 45,744 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இம் மாவட்டத்திலுள்ள 13 உள்ளூராட்சி சபைகளிலும் மொத்தம் 342 வாக்குச்சாவடிகளில் தேர்தல் கடமைக்காக 4,000அரச உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வாக்காளர்கள் நேரகாலத்தோடு வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிக்குமாறும் வாக்களிப்பு காலை 07 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 04 மணிவரை இடம்பெறவுள்ளதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தினத்தில் நடந்து கொள்ளும் முறை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெளிவூட்டப்பட்டுள்ளதுடன் மாத்தளை மாவட்டத்தில் இத்தேர்தலில் புதிதாக 4,255 வாக்காளர்கள் பதியப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ‘நிகசல கிரி ஹிசா – நிவாய் ஒபே சித’ இருநாள் கழிவுத் திட்டம் ஏற்பாடு







(மஸ்கெலியா நிருபர்)

மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை மற்றும் மஸ்கெலியா பிரதேச சபை இணைந்து ஏற்பாடு செய்த ‘நிகசல கிரி ஹிசா - நிவாய் ஒபே சித’ என்ற இரண்டு நாள் உக்காத கழிவு மேலாண்மைத் திட்டம் நல்லதண்ணி நகரில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டது.

சிவனொளிபாத மலை யாத்திரிகர்களால் கழிவுகளை ஒழுங்கற்ற முறையில் விட்டுச் செல்வதை அகற்றுவதன் மூலம் மிகவும் உணர்திறன் வாய்ந்த சிவனொளிபாத மலைக்கு ஏற்படும் சேதத்தைக் குறைக்கும் நோக்கில் சிவனொளிபாத மலைக்கு வருகை தரும் பக்தர்களுக்கு உக்காத கழிவுகளை முறையாக அகற்றுவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சியாக இது அமைந்திருந்தது.

மேலும், சிவனொளிபாதமலை கீழ் தளத்திலிருந்து திரும்பும்போது, உக்காத கழிவுகளைச் சேகரித்து தளத்தின் மேல் பகுதியிலிருந்து கொண்டுவந்த யாத்திரிகர்களுக்கு பரிசுகளை வழங்கும் நிகழ்ச்சியை மத்திய சுற்றுச்சூழல் ஆணையம் நடத்தியது.

பக்தர்களால் கொண்டுசெல்லப்பட்ட 20க்கும் மேற்பட்ட உக்காத கழிவுப் பைகளை மேலாண்மைக்காக மஸ்கெலியா பிரதேச சபையிடம் ஒப்படைக்க மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை நடவடிக்கை எடுத்தது.

மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையின் திடக்கழிவு மேலாண்மைப் பிரிவு மற்றும் கிரீன் பார்க் கழிவு மேலாண்மை மையம் இணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்தன.

இதற்கு மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையின் நுவரெலியா மாவட்ட அலுவலகம் மற்றும் மஸ்கெலியா பிரதேச சபை ஆகியன ஆதரவளித்தன. மேலும் பல தனியார் நிறுவனங்கள் யாத்திரிகர்களுக்கு பரிசுகளையும் வழங்கின.

## அஹதிய்யா பரீட்சை விண்ணப்ப இறுதித்திகதி இன்றுடன் நிறைவு

(உக்குவளை நிருபர்)

ஏப்ரல் 04ஆம் திகதிய அரச வர்த்தமானிப் பத்திரிகையில் காணப்பட்டதற்கிணங்க அஹதிய்யா பாடசாலை மாணவ மாணவியர்கள் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து அஹதிய்யா அதிபர்கள் உறுதிசெய்து அவர்களூடாக பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விண்ணப்ப இறுதித் திகதி மே 5ஆம் திகதியாகும்.

இம்முறையும் உக்குவளை அஹதிய்யா பாடசாலை மாணவிகள் 19 பேர் இப்பரீட்சைக்காக விண்ணப்பித்துள்ளதாக உக்குவளை அஹதிய்யா அதிபர் எம்.எஸ்.ஹலீம்தீன் தெரிவித்துள்ளதுடன் மாத்தளை மாவட்டத்தில் உக்குவளை அஹதிய்யா பாடசாலை நீண்டகாலமாக உக்குவளை அஜ்மீர் பாடசாலையில் ஞாயிறுதோறும் காலை 8.00 மணிமுதல் 11.30 மணிவரை சிறப்புற இயங்கிவருகிறது.

பர்ஹானா தலைமையிலான ஆசிரியை குழாமின் கல்வி வழிகாட்டல்களில் கடந்த 2023, 24 காலங்களில் அரச பரீட்சைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட அஹதிய்யா ஆண்டிறுதிப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை மற்றும் தர்மாச்சாரியர் ஆகிய பரீட்சைகளிலும் மாணவிகள் 08 பேர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதுடன், இவர்களுக்கான பாராட்டுவிழாவும் அண்மையில் நடத்தப்பட்டதெனவும் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்து மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதி ஜனாதிபதியை யாழில் கால்வைக்க விடமாட்டோம் என்கிறார்

### அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் சாடல்



''கொழும்பில் கோட்சூட்டுடனும் யாழ்ப்பாணத்தில் வேட்டியுடனும் வலம் வருகின்ற - ரணிலின் கோப்புகளைத் தூக்கித் திரிந்த செல்லப்பிள்ளை, அநுரவை யாழ்ப்பாணத்தில் கால்வைக்க விடமாட்டோம் எனக் கூறுகின்றார். முதலில் தனக்கு கால் வைக்க முடியுமா என்பதை யாழ்ப்பாணத்து மக்களால் நிராகரிக்கப்பட்ட அந்நபர் தேடிப் பார்க்க வேண்டும்'' - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (03) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

''நான் அமைச்சராக இருந்தாலும் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் மக்கள் மத்தியில் செல்கின்றேன். ஆனால், அவர் எஸ்.டி.எவ். பாதுகாப்புடன் வலம் வருகின்றார். இது வெட்கம். இவர் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதி. அநுரவை கால் வைக்க இடமளிக்கமாட்டாராம்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாநகர சபை முதல்வர் வேட்பாளர் கபிலனுக்கெதிராக வழக்கு தொடுக்கப்படுமாம். வழக்கு தொடுப்பதைத் தவிர அவருக்கு வேறு என்ன தெரியும்?

கபிலன் சுந்தரமூர்த்தி எமது கட்சியின் முதன்மை வேட்பாளர். அவர் தனி நபர் அல்ல. அவருக்குப் பின்னால் எமது கட்சி, அரசாங்கம் உள்ளது. கபிலனுடன் விளையாட முற்படுவது எம்முடன் விளையாட முற்படுவதாகும். சாக்கடை அரசியலின் வெளிப்பாடாகவே அவரை இலக்கு வைத்து தாக்கி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்து மக்களால் விரட்டியடிக்கப் பட்டவர்கள் தமக்கான அரசியல் இருப்பைத் தேடுகின்றனர். அதனால்தான் போராட்டத்துக்கான அறைகூவல் விடுக்கின்றது. ஆனால், உண்மை என்னவென்பது மக்களுக்குத் தெரியும்.

அதேவேளை, இந்நாட்டின் முன்னாள் போராளிகள் கனவுகண்டிருப்பார்கள். அது புலிகளாக இருக்கலாம், ஈ.பி.டி.பியாக இருக்கலாம், ஈ.பி.ஆர்.எல்.எவ்வாக இருக்கலாம். தமிழ் மக்கள் நிம்மதியாக, தன்மானத்துடன் வாழவேண்டுமென்பது அவர்களின் கனவு. அந்தக் கனவை தற்போதைய தமிழ் அரசியல்வாதிகளால் நிறைவேற்ற முடியுமா? போராளிகளின் அர்ப்பணிப்புக்கு அவர்களால் அருகில்கூட வரமுடியாது.

அவர்கள் கனவு கண்டிருந்தாலும் கூட அந்தக் கனவை நனவாக்குவதற்குரிய வேலையை நாம் செய்கின்றோம். இயக்கங்கள் மீது உண்மையான பற்றுள்ளவர்கள் தேசிய மக்கள் சக்தியையே ஆரத் தழுவிக்கொள்ள வேண்டும்.


அதேவேளை, புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கத்தை, உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. உண்மையான உரிமையாளர்கள் இல்லாதபோதுதான் அடுத்தக்கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும்''- என்றார்.

இவ்வூடக சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன், யாழ்.மாநகர சபை மேயர் வேட்பாளர் சு.கபிலன் ஆகியோரும் உடனிருந்தனர்.

## சாவகச்சேரியில் மணற்கொள்ளையர்களால் ஊடகர்களுக்கு தொடர்ச்சியாக உயிர் அச்சுறுத்தல்

### பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு





(சாவகச்சேரி நிருபர்)

சுயாதீன ஊடகவியலாளரும் தேர்தல் கண்காணிப்பாளருமான சாவகச்சேரியைச் சேர்ந்த தவராசா சுபேசனுக்கு தொடர்ச்சியாக மணற்கொள்ளையர் களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வந்த நிலையில், அது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மேற்படி மணற் கொள்ளைக் குழுவினர் ஊடகவியலாளருடைய தந்தைக்கு விபத்தை ஏற்படுத்திவிட்டு அது தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தாமல் அவ்விடத்தை விட்டு அகன்ற பின்னர் இரவு வேளையில் தொலைபேசியில் ஊடகவியலாளருக்கு அழைப்பை எடுத்து பணம் கேட்டு மிரட்டியுள்ளனர்.

அத்துடன், தாம் விபத்து ஏற்படுத்திய சம்பவத்தை வெளியே தெரிவித்தாலோ பணம் தராவிட்டாலோ மீண்டும் இவ்வாறான விபத்துகளை ஏற்படுத்துவோம் எனவும் கூறி மிரட்டியுள்ளனர்.

அதன் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர் சுபேசன் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் தொடர்ச்சியாக பல தடவைகள் தொலைபேசியில் அழைப்பெடுத்து உயிர் அச்சுறுத்தல் விடுத்ததுடன், அவருடைய தேர்தல் கடமைகளுக்கும் இடையூறு விளைவித்த நிலையில், மேற்படி சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட ஊடகவியலாளரால் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னராகவும் கள்ள மணல் அகழ்வு தொடர்பாக அறிக்கையிட்டமைக்காக மேற்படி ஊடகவியலாளரை மணற் கொள்ளையர்கள் அச்சுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். கள்ளியடி பகுதியில் கோர விபத்து - பலர் படுகாயம்



(ஜோசப் நயன்)

மன்னார்-யாழ் பிரதான வீதி, கள்ளியடி பகுதியில் நேற்று முன்தினம் (03) காலை இடம்பெற்ற கோர விபத்தில் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

மன்னாரிலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் கடமையாற்றும் பணியாளர்களை ஏற்றி வந்த தனியார் பஸ் கள்ளியடி பகுதியில் பணியாளர்களை ஏற்றுவதற்காக வீதிக்கருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

இதன்போது குறித்த பஸ்ஸுக்கு நேரெதிரே அதிவேகமாக வந்த கனரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குறித்த பஸ்ஸுடன் மோதி வீதியில் மோட்டார் சைக்கிளில் நின்றுகொண்டிருந்த ஒருவர் மீதும் மோதி பாரிய விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் நின்ற நபரும் காயமடைந்ததுடன், அவரது மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்துள்ளது. குறித்த விபத்தில் கனரக வாகனத்தின் சாரதி, உதவியாளர் ஆகிய இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் 09பேரும் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து குறித்து இலுப்பைக்கடவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியாவில் 04 நாட்களாக சிறுவனைக் காணவில்லை





வவுனியா- பொன்னாவரசங்குளம் பிரதான வீதியைச் சேர்ந்த 16 வயதுடைய லிங்கேஸ்வரன் தருஜன் எனும் சிறுவனை கடந்த 04 நாட்களாகக் காணவில்லையென பெற்றோரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சிறுவன் வீட்டில் தொடர்ச்சியாக தொலைபேசியை உபயோகித்திருந்ததை அவதானித்த தாயார் கண்டித்திருந்தார் என்றும் அதனைத் தொடர்ந்து சிறுவன் காணாமல் போயுள்ளதாகவும் குடும்பத்தார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சிறுவனை யாரேனும் அடையாளம் கண்டால் உடனடியாக 0773751064 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டு அறிவிக்குமாறு பெற்றோர் கோருகின்றனர்.

# மகளிர் கிரிக்கெட், உதைபந்தில் திருநங்கைகள் பங்கேற்கத் தடை!



ஜூன் 01ஆம் திகதிமுதல் திருநங்கைகள் மகளிர் உதைபந்தில் பங்கேற்கத் தடை விதிப்பதாக இங்கிலாந்து உதைபந்து சங்கம் அறிவித்துள்ளது. இதனால் இங்கிலாந்தில் பதிவு செய்துள்ள 20க்கும் மேற்பட்ட திருநங்கை வீராங்கனைகள் பாதிக்கப்படுவார்கள் என உதைபந்து சங்கம் தெரிவித்துள்ளது.

திருநங்கைகள் தங்கள் டெஸ்டோஸ்டெரோன் அளவு 12 மாதங்களுக்கு குறைவாக இருந்தால் மகளிர் அணியில் விளையாட அனுமதி இருந்தது. தற்போதைய சட்ட மாற்றத்தால் இந்தக் கொள்கை திரும்பப் பெற காரணமாகியுள்ளது.

இங்கிலாந்து உயர்நீதிமன்றம் ஒரு பெண்ணின் சட்ட வரையறை உயிரியல் பாலினத்தை அடிப்படையாகக் கொண்டது என கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி தீர்ப்பளித்தது. இதேவேளை ஸ்கொட்லாந்து உதைபந்து சங்கமும் அண்மையில் இதே விதியை அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இங்கிலாந்து உதைபந்து சங்கம் தடை விதித்த அடுத்த 24 மணித்தியாலத்தில் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சங்கமும் மகளிர் கிரிக்கெட் போட்டிகளில் திருநங்கைகள் விளையாடுவதற்கு உடனடி தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

ஆனால், எந்தக் கட்டுப்பாடும் இல்லாத ஓபன் போட்டிகளில் அவர்கள் சேர்ந்து விளையாடலாம் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிக்கையில் தெரிவித்துள்ளது. ஒரு பாலினத்தை வைத்து ஏற்றத்தாழ்வுகளை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொள்ளாமல், மற்ற வீராங்கனைகளின் பாதுகாப்புக்காக மட்டுமே இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# மகளிர் ரி20 உலகக்கிண்ணத்துக்கான மைதானங்கள் அறிவிப்பு




12 அணிகள் மோதும் 10ஆவது ஐ.சி.சி. மகளிர் ரி20 உலகக்கிண்ணத் தொடர் அடுத்த ஆண்டு இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் நடைபெறவுள்ள நிலையில் போட்டி நடைபெறும் மைதானங்களை ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு ஜூன் 12 முதல் ஜூலை 05 வரை போட்டிகள் நடைபெறுகின்றன. இந்தத் தொடரில் மொத்தம் 12 அணிகள் கலந்து கொள்கின்றன. இதில் போட்டியை நடத்தும் இங்கிலாந்து, இந்தியா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை, வெஸ்ட் இண்டீஸ் ஆகிய 08 அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. மீதமுள்ள 04 அணிகள் அடுத்த ஆண்டு நடைபெறும் தகுதிச்சுற்றின் மூலம் தெரிவாகும்.

இங்கிலாந்தில் உள்ள லோர்ட்ஸ் கிரிக்கெட் மைதானம் (லண்டன்), ஓல்ட் டிராபோர்ட் (மென்செஸ்டர்), ஹெடிங்லி (லீட்ஸ்), எட்ஜ்பாஸ்டன் (பர்மிங்காம்), த ஓவல் (லண்டன்), ஹாம்ப்ஷயர் பவுல் (த ஏஜியாஸ் பவுல் சவுத்தாம்ப்டன்), பிரிஸ்டல் கவுண்டி மைதானம் (பிரிஸ்டல்) என ஏழு இடங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் லோர்ட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் (லண்டன்) இறுதிப்போட்டி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டுத் துளிகள்

சென்னையுடனான ஆட்டத்தில் விராட் கோஹ்லி தனது 53ஆவது ஓட்டத்தை கடந்தபோது ஐ.பி.எல். தொடரில் 8,500 ஓட்டங்கள் (263 போட்டிகளில்) குவித்த முதல் வீரரானார். இவருக்கு அடுத்த இரு இடங்களில் ரோஹித் சர்மா 267 போட்டிகளில் விளையாடி 6,921 ஓட்டங்களும் ஷிகர் தவான் 222 போட்டிகளில் விளையாடி 6,769 ஓட்டங்களும் எடுத்துள்ளனர்.

★★★★★★★★★★★★★★

சி.எஸ்.கே. அணியுடனான ஆட்டத்தில் 14 பந்தில் அரைசதம் அடித்து அசத்திய ரொமாரியோ ஷெப்பர்ட் ஐ.பி.எல். தொடரில் 2ஆவது அதிவேக அரைசதம் அடித்து சாதனை பட்டியலில் இடம்பிடித்தார். இந்த பட்டியலில் ஜெய்ஸ்வால் (13 பந்துகள்) முதல் இடத்தில் உள்ளார். கே.எல்.ராகுல், பேட் கம்மின்ஸ், ரொமாரியோ ஷெப்பர்ட் (தலா 14 பந்துகள்) 2ஆவது இடத்தில் உள்ளனர்.

★★★★★★★★★★★★★★

ஐ.பி.எல் வரலாற்றில் 04 ஆயிரம் ஓட்டங்களை கடந்த முதல் இங்கிலாந்து வீரர் என்ற சாதனையை ஜொஸ் பட்லர் படைத்துள்ளார். மேலும் குறைந்த பந்துகளில் 04 ஆயிரம் ஓட்டங்களை (2,677 பந்துகளில்) எட்டிய வீரர்களில் 3ஆவது இடத்தையும் பிடித்துள்ளார். இந்த சாதனையில் கிறிஸ் கெய்ல் (2,653), ஏ.பி.டி வில்லியர்ஸ் (2,658) முதல் இரு இடங்களில் உள்ளனர்.

★★★★★★★★★★★★★★

குஜராத் அணியில் ஆடிவரும் தமிழக வீரர் சாய் சுதர்சன் ரி20 கிரிக்கெட்டில் 02 ஆயிரம் ஓட்டங்களை கடந்துள்ளார். இதனை வெறும் 54 இன்னிங்ஸ்களில் அடித்துள்ளார். இதன் மூலம் இந்த மைல்கல்லை வேகமாக எட்டிய இந்திய வீரர் என்ற சச்சின் டெண்டுல்கரின் சாதனையை (59 இன்னிங்ஸ்கள்) சுதர்சன் முறியடித்துள்ளார்.

★★★★★★★★★★★★★★

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் டேவிட் பூன், சர்வதேச போட்டி மத்தியஸ்தராக தனது 14 ஆண்டுகால பணியை நிறைவுக்கு கொண்டு வந்துள்ளார். அண்மையில் சட்டோகிராமில் நிறைவடைந்த ஸிம்பாப்வே - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டியில் டேவிட் பூன் தனது கடைசி போட்டியில் நடுவராக பணியாற்றினார். 64 வயதான பூன், 389 சர்வதேச போட்டிகளில் மத்தியஸ்தராக பணியாற்றியுள்ளார். மேலும், அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் 12 ஆண்டுகள் ஆடியிருந்தார். மத்தியஸ்தராக பணியாற்றுவதற்கு முன்பு 11 ஆண்டுகள் தெரிவாளராகவும் கடமையாற்றினார்.

# போதைப்பொருள் பாவனையால் தடைக்குள்ளான ரபாடா ரசிகர்களிடம் மன்னிப்பு கோரல்



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்துவீச்சாளரான ககிசோ ரபாடா, போதைப்பொருள் பயன்படுத்தியதால் அவருக்கு அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் இடைக்கால தடை விதிப்பதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

நடப்பு ஐ.பி.எல் தொடரில் குஜராத் டைட்டன்ஸ் அணியில் இடம்பெற்று முதல் இரண்டு போட்டிகளில் விளையாடிய ககிசோ ரபாடா, அதன் பின் தனிப்பட்ட காரணங்களுக்காக ஐ.பி.எல் தொடரிலிருந்து விலகுவதாகக் கூறி தாயகம் திரும்பினார்.

கடந்த ஜனவரி - பெப்ரவரி மாதம் தென்னாரிக்காவில் நடந்த எஸ்.ஏ.20 லீக் தொடரில் மும்பை இந்தியன்ஸ் கேப்டவுன் அணிக்காக ரபாடா விளையாடினார். இத்தொடரின் போதே இவர் ஊக்கமருந்தை பயன்படுத்தி இருக்கலாம். இருப்பினும் இவருக்கு எப்போது சோதனை நடத்தப்பட்டது, எவ்வளவு காலம் தடை என்பது தெரியவில்லை. இத்தடை காரணமாக உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் ககிசோ ரபாடா விளையாடுவாரா என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

இது தொடர்பாக ககிசோ ரபாடா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, ஐ.பி.எல் தொடரிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக விலகி அண்மையில் தாயகம் திரும்பினேன். உடல் சோர்வை நீக்கும் போதைப் பொருளை பயன்படுத்தியதால் எனக்கு அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாட இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனக்கு பிடித்த கிரிக்கெட்டினை மீண்டும் விளையாடுவதை எதிர்நோக்கி காத்திருக்கிறேன். என்னுடைய இந்த செயலுக்காக ஆழ்மனதிலிருந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# கோட்ட மட்ட கரப்பந்தாட்ட சம்பியனான காத்தான்குடி மத்திய கல்லூரி



(காத்தான்குடி செய்தியாளர்)

2025ஆம் ஆணடுக்கான காத்தான்குடி கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் காத்தான்குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இப்போட்டிகளில் அண்மையில் நடைபெற்ற 20 வயது ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் காத்தான்குடி மத்திய கல்லூரி அணி கோட்ட மட்ட சம்பியனாகத் தெரிவாகியுள்ளது. அத்துடன் 18 வயது ஆண்கள் கரப்பந்தாட்ட போட்டிகளில் காத்தான்குடி மத்திய கல்லூரி அணி இரண்டாமிடத்தை பிடித்தது.

இதன்படி நடைபெறவுள்ள வலய மட்ட போட்டிகளில் காத்தான்குடி மத்திய கல்லூரியின் 18, 20 வயது ஆண்கள் இரு அணியினரும் பங்குபற்றவுள்ளனர்.

இவ்வெற்றியை ஈட்டிய மாணவர்களுக்கு பாடசாலை சமூகம் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளதோடு இவர்களை வழிப்படுத்திய கல்லூரி அதிபர், பிரதி அதிபர்கள் குறிப்பாக பயிற்றுவித்து நெறிப்படுத்திய உடற் கல்வி ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துள்ளது.

# மெட்ரிட் ஓபன் சபலென்கா வசம்



ஸ்பெயினில் நடைபெற்ற மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் பெலாரஸ் நாட்டை சேர்ந்த உலகின் முதல்நிலை வீராங்கனையான அரினா சபலென்கா மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.

பல முன்னணி வீர, வீராங்கனைகள் பங்கேற்ற மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடர் கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று (04) நிறைவுக்கு வந்தது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப்போட்டியில் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலென்கா, அமெரிக்காவின் கோகோ காப் உடன் மோதினார். இதில் சபலென்கா 6:3, 7:6 (7:3) என்ற செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டம் கைப்பற்றினார்.

இதன் மூலம் மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரில் சபலென்கா மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றதுடன் தனது டென்னிஸ் வாழ்க்கையில் 20ஆவது சம்பியன் பட்டத்தையும் கைப்பற்றினார்.

# கொழும்பில் நடைபெற்ற மே தின விளையாட்டுப் போட்டிகள்



(எம். நாஸர்)

கொழும்பு செட்டியார் தெரு மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் புறக்கோட்டை பொலிஸ் நிலைய சிவில் பிரஜா பொலிஸ் பிரிவு இணைந்து 14ஆவது வருடமாகவும் ஏற்பாடு செய்த மே தின விளையாட்டு போட்டிகள் கடந்த 01ஆம் திகதி கொழும்பு செட்டியார் தெருவில் மிக சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வானது காலை 7.30 மணியளவில் புறக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் மலையக கல்வி அபிவிருத்தி மன்ற தலைவர் மன்ற போஸ் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

இவ் விளையாட்டு விழாவில் வீதியோட்டம், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், 100 மீற்றர், 200 மீற்றர் இன்னும் பல்வேறு கலை கலாசார விளையாட்டு போட்டிகள் இடம்பெற்று மாலை பரிசளிப்பு விழாவோடு நிகழ்வுகள் அனைத்தும் நிறைவு பெற்றன.

## IPL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 55

ஹைதராபாத் VS டெல்லி

ஹைதராபாத் - இரவு 7.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 52

பெங்களூர் - 213/5 (20)

சென்னை - 211/5 (20)

பெங்களூர் 2 ஓட்டங்களினால் வெற்றி

## PSL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 25

முல்தான் VS பெஷாவர்

முல்தான் - இரவு 8.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 23

இஸ்லாமாபாத் - 157/9 (20)

குவெட்டா - 158/8 (19.5)

குவெட்டா 2 விக்கெட்களினால் வெற்றி

தற்போது விற்பனையில்...
மாணவர்களின் கல்வி வழிகாட்டியான
ஜீனியர் தமிழன்
மே மாத சஞ்சிகைகள்
பாடசாலை பாடத்திட்டத்தின்படி,
தவணைகளின் அடிப்படையில்,
தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுக்கப்பட்டு
வெளிவருகின்றன.


மேலதிக விபரங்களுக்கு :
011 5 200 900 074 1684643 | 0777 983308 Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo –07